பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

சாங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 07 | திங்கட்கிழமை | (22.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 03

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

## பிரபா-ஹக்கீம் ஒப்பந்தம் முறிந்துவிட்டதா?

# விடுதலைப் புலிகள் எடுத்த முடிவு பாரிய விளைவை ஏற்படுத்தும்!



## அமைச்சர் ரவூப் ஹக்கீம் பி.பி.ஸிக்கு பேட்டி

(நமது நருபா)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் நானும் செய்து கொண்ட ஒப்பந் தமானது இரண்டு சமூகங்களினதும் தலைவர்களும் செய்து கொண்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக முறித்துக் கொள்ளும் போது, அது பாரதூரமானதாக அமைந்து விடும் என்பதை நினைவுபடுத்த வேண்டியது எனது கடமை யாகும். இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் உட்பட சுமார் 40 ஊடகவியலாளர்கள் கடந்த 19ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் செய்து கொண்ட உடன்பாடு எப்போதோ முறிந்துவிட்டது என்று தமிழ்ச்செல்வன் வெளியிட்ட கருத்துக் குறித்தே அமைச்சர் ரவூப் ஹக்கீம் பி.பி.ஸிக்கு மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர்

(10ம் பக்கம் பார்க்க)

# வடக்குக் கிழக்கில் மூன்று முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் இயங்குகின்றன

## மூதூர்ப் பொலிஸ் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வடக்கிலும் கிழக்கிலும் தீவிர முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் இயங்கி வருவதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மைக் காலங் களில வடக்கிலும் கிழக்கிலும் ஆகக் குறைந்தது மூன்று குழுக்களாவது இயங்கிவருவதாகத் தமக்கு அறிக் கைகள கிடைத்துள்ளன என மூதூர்ப் பொலிஸ் ...

...டம் இருப்பதாக கல்முனைப் பொலி ஸாரும் தெரிவிக்கின்றனர்.

கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூ கத்தவர்கள் தாக்குதலுக்கு ஆளாகி வரும் நிலையில் இக்குழுக்கள் தோன்றியிருக்கலாம் எனத் தெரிவிக்...

உதவிகளுக்கு மத்திய கிழக்கு நாடு களைச் சேர்ந்த குழுக்களுடன் தொடர்பு வைத்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின் றனர்.

இத்தகைய ...

மேலும் சிக்கலுக்குள்ளாக்குமென்றும் இக்குழுக்கள் ஓஸாமா, நொக்ஸ், ஜேட் என்னும் பெயர்களில் இயங்கி வருகின்றன என்றும் தெரிவிக்கப்படு கின்றது. இவ்விடயம் பற்றி மட்டக்...

## ஜப்பானியத் தூதுவர் புலிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஜப்பானியத் தூதுவர் ஆஷியோ சூடா, தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் கிச்சிறோ சுடா ஆகி யோர் கிளிநொச்சியில் இன்று காலை தமிழீழ விடுதலைப் புலி களைச் சந்திக்கவுள்ளனர். உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி செல் லும் இவர்கள் கிளிநொச்சி வைத் திய சாலைக்கும் கிளிநொச்சியில் ...

(10ம் பக்கம் பார்க்க)

# ஆயுதக்குழுக்கள் இயங்குகின்றன

## மூதூர்ப் பொலிஸ் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வடக்கிலும் கிழக்கிலும் தீவிர முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் இயங்கி வருவதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மைக் காலங்களில வடக்கிலும் கிழக்கிலும் ஆகக் குறைந்தது மூன்று குழுக்களாவது இயங்கிவருவதாகத் தமக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன என மூதூர்ப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் இதேபோன்ற குழுக்களின் நடமாட்டம் இருப்பதாக கல்முனைப் பொலிஸாரும் தெரிவிக்கின்றனர்.

கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகத்தவர்கள் தாக்குதலுக்கு ஆளாகி வரும் நிலையில் இக்குழுக்கள் தோன்றியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இக்குழுக்கள் பல்வேறு ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளன என்றும் நிதி மற்றும் உதவிகளுக்கு மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த குழுக்களுடன் தொடர்பு வைத்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய குழுக்கள் இயங்குவது கிழக்கில் தற்போது புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே நிலவும் சமாதான சூழ்நிலையை மேலும் சிக்கலுக்குள்ளாக்குமென்றும் இக்குழுக்கள் ஓஸாமா, நொக்ஸ், ஜேட் என்னும் பெயர்களில் இயங்கி வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடயம் பற்றி மட்டக்களப்பு மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஹிஸ்புல்லா அறிவுக்கெட்டிய

(10ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானியத் தூதுவர் புலிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஜப்பானியத் தூதுவர் ஆஷியோ சூடா, தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் கிச்சிறோ சுடா ஆகியோர் கிளிநொச்சியில் இன்று காலை தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்கவுள்ளனர். உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி செல்லும் இவர்கள் கிளிநொச்சி வைத்திய சாலைக்கும் கிளிநொச்சியில் அமைந்துள்ள யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்திற்கும் செல்லவுள்ளனர்.

- இச்சந்திப்பின் பின்னர் ஏ-9 வீதியூடாக வவுனியாசெல்லவுள்ளனர்.

(ந)

# மட்டு–அம்பாறை எல்லைப் பகுதியில் புலிகள் பதுங்குகுழி அமைக்கின்றனர்

## கண்காணிப்புக் குழு அறிவிப்பு

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு-அம்பறை மாவட்ட எல்லைப் பிரதேசங்களில் உள்ள புல்லுமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பதுங்குகுழி ஒன்றை அமைத்து வருவதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஊடகப் பேச்சாளர் ஆட்மிஸ் பிரகாடோறெட்றிக் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டு வரும் பதுங்குழி தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் மேலும் தகவல் தருகையில்,

அம்பாறை-மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளினால்அமைக்கப்பட்டு வரும் புதிய பதுங்குழி யாருடைய கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது என்பதை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டு வரும் புதிய பதுங்குகுழி யாருடை கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டு வருகிறது என்பதை இராணுவம் உறுதிச் செய்ய முடியாதிருப்பதாக இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுவரும் புதிய பதுங்குழி விடுதலைப் புலிகளின் கட்

(10ம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசியல் நிலை குறித்து நோர்வே அறிக்கை தயாரிப்பு !

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் அறிக்கை ஒன்றைத் தயாரித்து நோர்வேக்கு அனுப்பியுள்ளது.

தூதரகத்தின் முதலாவது செயலாளர் தோமஸ் பிறாங்லண்ட் இந்த அறிக்கையைத் தயாரித்து ஒஸ்லோவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கையின் அரசியலில் காணப்படும் ஸ்திரமற்ற நிலைமை தொடர்பாகவும் இது பற்றிய விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் தூதுரகத்தின் செயலாளர், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார். இதன் போது தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு கண்டு சமாதான முயற்சிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் நோர்வே தொடர்ந்தும் சமாதான முயற்சியில் அனுசரணையாளராகச் செயற்பட வேண்டுமெனவும் புலித்தேவன் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி-பிரதமர் இணக்கப்பாடு மற்றும் சமாதான முயற்சியின் எதிர்காலம் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்பன குறித்து அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.(த)

# நான்கு தமிழ்க் கட்சிகள் இணைந்து சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக பாராளுமன்றில் போராட்டம் நடத்தும்

## மனோ கணேசன் எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நான்கு முக்கிய தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்தை பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப் போவதாக மேல் மாகாண மக்கள் முன்னணிக் கட்சித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இச் சந்திப்பு நேற்றுக்காலை புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது. மேல் மாகாண மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன இணைந்தே இப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய பிரதேச மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. இதன் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக அரசியல் துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடினோம் எனத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களையும் பிரித்து நடாத்தப்படும் அரசியலை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.(10ம் பக்கம் பார்க்க)

# கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நல்ல நாளைத் தேடுகின்றோம்

## பொ.ஐ.முன்னணி செயலாளர் டீ.எம்.ஜயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி-ஜே.வி.பிக்கிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை இவ்வருடம் கைச்சாத்திடப்படமாட்டாதென பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம் ஜயரட்ண தெரிவித்துள்ளார். இருதரப்பினரும் கலந்துரையாடல்களை முடித்துக்கொண்டுள்ளதாகவும், கூட்டணியை உருவாக்குவதற்கென புரிந்துணர்வு ஒப்பந்தம் அடுத்த மாதமே கைச்சாத்திடப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கென ஒரு நல்ல நாளினைக் குறிப்பதற்கு இருதரப்பினரும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், ஆனால் அது அடுத்த மாதமே என்றும் தெரிவித்தார்.

ஜயரட்ணவின் கூற்றுப்படி ஒரு வருடத்தின் இறுதி மாதம் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட சரியான காலமாக இராது. இலங்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் வரலாற்றில் இம் மாதம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை தற்போதைய நெருக்கடி நிலையைப் போக்கும் நோக்குடன பிரதமரும் ஜனாதிபதியும் பொது ஜன ஐக்கியமுன்னணி-ஐக்கிய தே. கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவார்கள்.

மேலும் ஜனாதிபதி பொறுப்பேற்ற அமைச்சு விடயங்களில் அவருடன் சமரசம் காண்பதற்கு பிரதமர் ஏற்கனவே தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதிக்கான

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

அருள் வளர் ஸ்ரீ சுந்த ஆஞ்சநேய கோவில்

# ஜெயந்தி விழா

இணுவில் - மருதனார்மடம்

நிகழும் மங்களகரமான மார்கழித் திங்கள்
(23-12-2003) செவ்வாய்க்கிழமை
காலை 7 மணி முதல் 12 மணிவரையில்
பொங்கல் விழா நடைபெறும்.
அடியார்கள் பொங்கிப் படைத்து
ஆஞ்சநேய பெருமானின் திருவருளைப் பெறுக.

## நிகழ்ச்சி நிரல்

காலை: 07.00 மணிக்கு 108 கலச அபிஷேகம்
10.00 மணிக்கு விசேட சொற்பொழிவு
திரு.ஆர்.திருமுருகன் அவர்கள்
12.00 மணிக்கு விசேட பூசை
சந்தனக் காப்பு அலங்காரம்
01.00 மணிக்கு மகேஸ்வர பூசை
(அன்னதானம்)
மாலை 05.00 மணிக்கு விஷேட பூசை
06.30 மணிக்கு தெய்வீக இசை அரங்கு
பாட்டு: பிரம்மஸ்ரீ க.இராமநாதசர்மா
வயலின்: திரு.ராதாகிருஷ்ணன்
(வயலின் வித்துவான்)
மிருதங்கம்: திரு.எஸ்.துரைராஜா

அனைவரும் வருக,
அருள்பெறுக.

சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஆதீனகர்த்தா

(8048)


# வடமராட்சி கிழக்கை புனரமைக்க யாழ்.அரச அதிபர் நடவடிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் அடுத்த வருடத்திலிருந்து மேற்கொள்ளபபடும் என யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் உறுதியளித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்தி தொடர்பாக நேற்று நடைபெற்ற உயர் மாவட்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம் பெற்றுள்ள யுத்த அழிவுகளை நான் நேரில் பார்த்துள்ளேன்.

அவற்றை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இம் மாநாட்டில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அ.விநாயகமூர்த்தி மற்றும் கடற்புலிகளின் தளபதி மங்களேஸ், கடற்புலிகளின் மக்கள் தொடர்பாடல் பொறுப்பாளர் மறவன் மாஸ்ரர், வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் இ.தாயகன், தமிழர் புனர்வாழ்வுக் கழகதிட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் திலகர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-43)

## ஆசிய அபி.வங்கியின் உதவியுடன் வடக்கு-கிழக்கில் அபி.திட்டம்

(திருநெல்வேலி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

'முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பிரதேச செயற்றிட்டம்' எனப் பெயரிடப்பட்ட இத்திட்டம் அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து நான்கு வருடங்கள் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டம் நான்கு பிரிவுகளாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 80 மில்லியன் அமெரிக்க டொலரினையும் அரசு 26.9 மில்லியன் அமெரிக்க டொலரினையும் வழங்கவுள்ளது.

இத்திட்டத்தில் வீதி புனரமைப்பு மின்விநியோகம், பாடசாலைகளின் அபிவிருத்தி, நீர் விநியோகம், சுகாதாரம், சிறியவீதி புனரமைப்பு, வருமானத்தை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தல், போரினால்பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைப்புச் செய்தல் போன்ற திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. (ச-43)

## பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் புத்தளத்தில் பெண் படுகாயம்

(புத்தளம்)

புத்தளம் நகரில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவம் ஒன்றில் பெண் ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இறாகம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இத் துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றது.

புத்தளம் கடற்கரை வீதியில் போக்கு வரத்துக்கு இடைஞ்சல் விளைவிக்கும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியை அப்புறப்படுத்துமாறு பொலிஸார் கூறியதை அடுத்து ஏற்பட்ட வாக்குவாதத்தின் போதே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று புத்தளத்திற்கு சென்றுள்ளதாகவும் பெண்மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தரைக் கைது செய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை இச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டுள்ளது. (ம)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்படவிருந்த புதிதாக நியமனப் பெற்ற ஆசிரியர்களுக்கான வழி காட்டல் கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கு நாளை காலை 9.00 மணிக்கு யாழ்.இராமநாதன் கல்லூரிலும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட தினத்தன்று கல்வி அமைச்சருக்கும் சகல ஆசிரிய தொழிசங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளதாலேயே இக்கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது.


இக்கருத்தரங்கு நடைபெறும் திகதி சம்மந்தப்பட்டவர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)


சங்குநாதம்

சதாமின் இறுதிக்காலம்
ஏன் இப்படி முடிந்தது
கோவையூர் ஜெயன்

சமாதானத்தை விரும்புவதாக
அரசியல்வாதிகள் நடிக்கின்றனர்
டொறிங்ரன்

பாதுகாப்பு அமைச்சின்
நிதி ஒதுக்கீட்டை
அரசு ஆதரித்தது ஏன்
விதுரன்




ஆலடிமாநாடு

வியாசரின் பதில்கள்

கேஜி.குணசேகரம் எழுதும்
கல் தூண்கள்
தொடர்

மற்றும் பல அம்சங்களுடன்.....

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா14/-

சங்குநாதம்

# புனிதமான வாழ்வுக்கு வழிகாட்டியவர் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவி!

**தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் ஜனன தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

வேதகாலம் முதல் சமய வரலாற்றில் பெண்களிற்கு என ஓர் த ரியிடம் இருந்து வந்துள்ளது. வாழையடிவாழையாக எண்ணற்ற பக்தைகளும், கர்ம வீரர்களும், யோகினிகளும், ஞானியரும் தோன்றி உலக சமய வரலாற்றை வளம் பெறச் செய்து வந்துள்ளனர். அவ்வரிசையில் இவ்வனைவரினதும் ஓர் ஒட்டுமொத்த வடிவமாக, பெண்மையின் ஒரு முழு வடிவமாக, காலத்தின் தேவை கருதி அவதரித்தவரே தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி.

1853ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் நாள் வங்க நாட்டிலே ஜெயராம் பாடி என்னும் ஓர் கிராமத்திலே ஏழைப்பிராமண குடும்பத்தின் மூத்த புதல்வியாக அன்னை அவதரித்தார்.

தமது ஐந்தாவது பிராயத்திலே தவசீலர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் துணைவி ஆனார். தனது தெ...வீகக் கணவரின் வழிநின்று ஓர் புனிதமான வாழ்க்கைக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார் அன்னை. கன்னி கழியாதிருந்தும் ஆயிரமாயிரம் பக்தர்கள் 'அம்மா அம்மா' என்று அழைத்து நிழல் பெறக்கூடிய தாய்மையின் விருட்சமாக விளங்கினார் அன்னை.

## துறவியின் இருப்பிடம்

ஓர் அசாதாரண குடும்பச் சூழலில், சகோதரர்களின் பிணக்குகளுக்கு மத்தியில் வாழ்ந்த அன்னை ஓர் எளிமையான இல்லத்தரசியாக மட்டுமல்லாது, துறவி,வேந்தர்களை உருவாக்குகின்ற ஓர் துறவின் இருப்பிடமாகவும் திகழ்ந்தார்.

ஆன்மீக வாழ்வின் ஓர் ஞான சூரியனாகத் திகழ்ந்தவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண ப...மஹம்சர். அவருடைய இணையில்லாப் பெரு வாழ்வு ஓர் தவமாகும். அத் தவ சக்தியினின்றும் உ நித்தவர்கள் தான் இராமகிருஷ்ண மடத்துறவியர்கள். குருதேவரின் மறைவுக்குப் பின் இத்துறவியர்களைத் தாங்கும் துணையாக, சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்கு வானில் உதித்து தன்னொளி பரப்பிநிற்கும் ஓர் சந்திரோதயமாக இராமகிருஷ்ண பரமஹம்சரின் மறைவை ஈடுசெய்து இராமகிருஷ்ண மடம் அமைக்கப் படுவதன் அடிக்கல்லாக, 'சங்க ஜனனி' யாகத்திகழ்ந்தவர் தூய அன்னை அவர்கள்.



ரஷ்ய நாட்டு மேதைகளுள் ஒருவரான டாக்டர் ரி.பி.ரி.பகோப் என்பவர் அன்னையைப் பற்றிக் குறிப்பிடும்போது 'இராமகிருஷ்ண மிஷனுக்கு மட்டுமல்லாது, சுவாமி விவேகானந்தரின் உலகளாவிய சாதனையின் பின்னணிச் சக்தியும் அன்னையே' என்கிறார்.

## சிறந்த ஆன்மீகவாதி

அன்னை தூய்மையே குணமாகவும், தூய்மையே வாழ்வாகவும் தூய்மையே வடிவமாகவும் கொண்டவர். நாணத்தைத் திரையாகப் போர்த்தியவர். பாரதப் பெண்மையின் பூரணவடிவம். இவ்வாறு இருந்த போதிலும் சாதி, மத பேதமின்றி, ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி அனைவருக்கும் ஓர் உன்னதத்தாயாக நிழல்தரு மரமாக அன்பெனும் கரங்கள் நீட்டி ஆதரித்தார். அன்னையின் அருகில் சென்ற அனை வரும் அவரின் அன்பால் கவரப்பட்டனர். ஆன்மீகத்தில் உயர்ந்தனர்.

தூய அன்னையின் அன்புக் கதிர்கள் அவர் உடல் உகுத்ததின் பின்னும் உலகின் பல பாகங்களிலும் உள்ள எண்ணற்ற மனித இதயங்களைக் கவர்ந்துகொண்டுதான் இருக்கிறது. அன்னையின் புனிதமான அன்பு எவ்வாறு பரந்து நிழல் பரப்பிக்கொண்டு இருக்கிறது என்பதற்கான ஓர் சிறு உண்மைச் சம்பவம் இங்கு விரிகிறது. ஓர் சமயம் இராமகிருஷ்ண சங்கத்தின் மூத்த துறவிகளுள் ஒருவரான சுவாமி லோகேஸ்வரானந்தாவும் மற்றைய சில துறவிகளும் வங்காள நாட்டிற்கு நிவாரணப் பணியின் நிமிர்த்தம் சென்றுள்ளனர். ஜெசூர் என்ற இடத்திற்கு அவர்கள் பிரயாணித்த பொழுது களைப்படைந்ததன் காரணமாக அங்கிருந்த முஸ்லிம் அன்பர் ஒருவரின் தேநீர்க்கடைக்குச் சென்று தேநீர் அருந்தினர்.

அத்தேநீர்க் கடையில் ஒரேயொரு படம்மட்டும் தொங்கவிடப் பட்டிருந்தது. அது அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் படம். இதைப் பார்த்த துறவிகள் ஆச்...ரியம் அடைந்து அம் முஸ்லிம் அன்பரிடம் 'இது யாருடைய படம் என்பது உங்களிற்குத் தெரியுமா?' என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவ் அன்பர் 'நான் என் நான்காவது பிராயத்திலேயே என் தாயை இழந்து விட்டேன். அதனால் என் தாயின் தோற்றம் எப்படி என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால், என் கனவில் என் தாய் வருவாள். என்னைத் தன் மடியில் போட்டுத் தாலாட்டுவாள். துன்பமான வேளையில் ஆறுதல் மொழி பகர்வாள். ஒருநாள் எதிர்பாராத விதமாக எனக்கு ஓர் கலண்டர் கிடைத்தது. என்ன ஆச்சரியம்! அக்கலண்டரில் இருந்தது என் கனவில் வந்து துயர் துடைக்கும் தாயின் உருவம். அப்படத்தையே நான் எனது கடையில் மாட்டியிருக்கிறேன். இவர்தான் என்தாய் என்றும் கருதுகிறேன். இப்படத்தைப் பார்க்கும் தோறும் என் மனதில் எல்லையில்லா அமைதி குடிகொள்கிறது என்றார். இதைக் கேட்ட துறவிகள் அன்னையின் அன்பை எண்ணிப் புழங்காகிதம் அடைந்தனர்.

அன்னையை 'அம்மா' என்று கூவி அழைத்தபடி ஒருவர் வந்து தஞ்சம் அடைந்தால், அவர் நல்லவராயினும் சரி, தீயவராக இருந்தாலும் சரி அன்னை அவருக்கு அடைக்கலம் அளித்து விடுவார். தூய்மை என்பது புறத்தில் மட்டுமன்று அகத்திலும் இருக்கவேண்டும். அன்புமூலமே மனித உள்ளத்து உணர்வை தூய்மையாக்கி உன்னத நிலைக்கு உயர்த்த முடியும் என்பது அன்னையின் கருத்தாகும். ஒவ்வொரு ஜீவராசிகளிடத்தும் தூய அன்பு வைப்பதன் மூலம் நாம் இறையருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்கிறார் அன்னை. லௌகீகவாழ்விலும் சரி, ஆன்மீக வாழவிலும் சரி கடமையைச் சரிவரச் செயவதன் மூலமே அனைத்து உயர் நிலைகளையும் பெற்றுவிட முடியும் என்பதை வாழ்ந்து காட்டிய அவதாரம். குடும்பத்தலைவியாகவும், குருதேவியாகவும் பிறர் நலனுக்காகவே தன் வாழ்க்கையில் பல கடினமான பாதைகளைக் கடந்தவர் அன்னை.

மனமே யாவற்றிற்கும் மூலகாரணம். மனதின் வலிமை மிகப் பெரியது. மிகவும் மகந்தான காரியங்களைச் சாதிக்கும் திறன் மனவலிமைக்குண்டு. அப்படி இருக்கும் போது பல தீய எண்ணங்களால் மனதை நிரப்பி அதன் ஆற்றலை மட்டுப்படுத்தாதீர் என்று அன்னை அறிவுறுத்தி இருக்கிறார். சாதாரண மனதின் இயல்பு கீழ் நோக்கிப் போவதுதான். மனதைப் பலவந்தப்படுத்தி அணை போட்டு வைத்தாலும் அது அவ்வப் போது உடைத்துக் கொண்டு வெளியேறி வடத்தான் செய்யும். தொடர்ந்து முயற்சிப்பதன் மூலமும், நல்லவர்களின் சேர்க்கையினாலும், நல்ல விஷயங்களைச் சிந்திப்பதன் மூலமும் மனம் உயர்ந்த நிலையை அடைவது உண்மை என்கிறார் அன்னை.

## நல்லதோர் வழிகாட்டி

அன்னை சாரதை திட்டம் தீட்டி எந்த ஓர் சமூக சீர்திருத்தத்தையும் செய்யவிலலை.அவரது வாழ்க்கையே எமக்கு வழிகாட்டும் ஓர் பாடமாகி புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும். ஒவ்வொரு பயிற்சிலும், சொல்லிலும், செயலி லும் நேர்மையைக் கடைப்பிடிப்பதே ஓர் தவமாகும். இத்தவத்தின் மூலமாக மேன்...மை அடையமுடியும் என்பதற்கு சான்றாக விளங்கியவர் அன்னை.

செல்வி இ.மைத்ரீ
24ம் அணி
மருத்துவபீடம்

அன்னை இவ்வுலகிற்கு விடுத்த இறுதிச் செய்தி இதுதான் - எம்மிடம் பல குற்றங்கள் நிறைந்துள்ள போது தான் நாம் பிறருடைய குற்றங்களைக் காண விழைகிறோம் எனவே "உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறர் குற்றங்களைக் காணாதே, மாறாக உன் குற்ற...களையேகாண்' என்பதேயாகும்.

எனவே அன்னையின் வாழ்வை இனறய தலை முறையினராகிய நாம் ஓர் முன்னோடியாகக் கொண்டு எமது வாழ்வை நல்வழியில் முன்னெடுப் போமாக.

"ஜெய் போலோ ஸ்ரீசாரதாமாயிக்கு! ஜெய்''. □

# தேர்தல் முறைத் திருத்தங்கள் ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்படும்

## தினேஷ் குணவர்த்தன அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறைகளில் திருத்தம் கொண்டுவருவது தொடர்பான சிபார்சுகளை பாராளுமன்றத் தெரிவுக் குழு அடுத்த மாதம் சமர்ப்பிப்பதற்கு ஏற்றவகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகத் தெரிய வருகிறது.

தேர்தல் முறைகளில் செய்ய வேண்டிய திருத்தங்கள் குறித்து சமர்ப்பிக்கப்படவுள்ள தேர்தல் திருத்த சிபார்சுகள் அனைத்தும் பூர்த்தியடையும் தறுவாயில் இருப்பதாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்து தினேஷ் குணவர்த்தன மேலும் கருத்து வெளியிடுகையில்,

பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தல்கள் தொடர்பாகச் செய்யப்பட்டுள்ள பல திருத்தங்கள் பற்றி விரைவில் அறிவிக்கப்படவுள்ளன.

அத்துடன், கடந்த 2001 ஆம் ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப் பட்ட சனத்தொகை குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரங்களின் அடிப் படையில், மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதனாலேயே தேர்தல் முறைகளிலும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. இது விடயம் தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழு அதிக கவனம் செலுத்தி வருகின்றது எமது சிபார்சுகள் அடுத்தமாதம் அளவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (தி-18,61)

## நுளம்புவலை வழங்கல்

(ஊர்காவற்றுறை)

அல்லைப்பிட்டிப் பகுதி மக்களுக்கு நுளம்பு வலைகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் நுளம்புகளால் ஏற்படும் டெங்குகாய்ச்சல், மலேரியா போன்ற நோய்கள் பரவுவதை தடுக்கும் முன்னெச்சரிக்கையாகவே நுளம்பு வலைகள் விநியோகிக்கப் பட்டுள்ளன.

இந்த நுளம்புவலைகள் வேலணைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் வழிகாட்டலில் வழங்கப்பட்டுள்ளன. (தி-75)

## நுளம்பைக் கட்டுப்படுத்த மருந்துகள் விசிறல்

அல்லைப்பிட்டிப் பகுதியில் டெங்கு மற்றும் மலேரியா நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்தும் முகமாக வேலணைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஏற்பாட்டில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் உள்ள குளங்கள், பாழடைந்து கிணறுகள் மற்றும் கழிவுகள் நிறைந்த இடங்களில் நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் வகையில் மருந்துகள், கிருமிகொல்லிகள், கழிவு ஒயில் என்பன விசிறப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(தி-75)

# உருத்திரபுரம் மத்திய மகப்பேற்று மனை அடிப்படை வசதிகளற்ற நிலையில்

(மருதங்கேணி)

கிளிநொச்சி உருத்திரபுரம் மத்திய மருந்தக மகப்பேற்றுமனை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருவதாகத் தெரியவருகிறது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக சேதங்களுக்கு உள்ளாகியுள்ள மேற்படி மருந்தக மகப்பேற்றுமனை பல காலமாக இயங்காமல் இருந்து வந்தது.

இதையடுத்து, கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் கிளிநொசசி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு அப்பகுதி மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்க, மேற்படி மகப்பேற்று மனையின் ஒரு பகுதி புனரமைப்புச் செய்யப்பட்டது.

ஆயினும், உரியமுறையில் கட்டடப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாததால், விலங்குகள் பலவும் இக் கட்டடத்தினுள் சென்று அசுத்தப்படுத்துவதால், கர்ப்பிணிகளுக்கு தற்போது மரநிழலில் வைத்தே சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி துர்ப்பாக்கிய நிலைமைகளுக்குக் காரணமான கட்டடப் புனரமைப்புப் பணிகளை உரிய முறையில் விரைவில் மேற்கொள்மாறு அப்பகுதி மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-35)

# போக்குவரத்து மார்க்கக் கட்டணம் அடுத்த ஆண்டு முதல் அறவீடு

கொத்தணி பஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான பஸ்வண்டிகளுக் கான போக்குவரத்து மார்க்க அனுமதிக கட்டணம் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அறவிடப்படவுள்ளது.

அரசின் போக்குவரத்து தனியார் மயப்படுத்தும் திட்டத்தின் ஒரு கட்டமாகவே இந்நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

இத்தகைய வேலைத்திட்டங்கள் முன்னைய காலங்களில் அரச போக்குவரத்துத் துறைகளில் நடைமுறைபடுததப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

என்ன...போக்குவரத்து அமைச்சின் தீர்மான...க்கு அமைய இத்திட்டம் அறிமுகபபடுத்தபபட்டுள்ளது.(தி-61)

சிறுவிளம்பரம்

ஸ்தோத்திர நூல்

ஸ்ரீகணேச, சுப்ரம் மண்ய சோடச, அஷ்டோத்ர சதநாம சக்ஸர நாமஸ்தோத்திரங்கள் சமஸ்கிருதநூல் (திருக்கார்த் திகை 2003) வெளியீடாக வெளியிடப்பட்டது. வேண்டிய சிவாச்சாரியர்கள் பெற்றுக்கொள்ளலாம். சிவஸ்ரீ. கு.தியாகராஜக் குருக்கள் செல்லக்கதிர்காம கோவில் நீர்வேலி. (C/7000)


# மிதிவெடி அகற்றும் பணிக்கு படையினர் ஒத்துழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நடைபெற்று வரும் மிதிவெடிகள் அகற்றும் செயற்பாடுகளுக்கு படைத்தரப்பு போதிய ஒத்துழைபபுகளை வழங்கி வருவதாக யாழ்.மாவட்ட மிதிவெடிகள் செயற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிறுதத சூழ்நிலையிலும் மக்கள் இயல்பான முறையில் நடமாட மிதிவெடிகள் பெரும் அச்சுறுத்தலாக அமைவதால், அவற்றைப் அகற்றும் நடவடிக்கைகள் குடாநாடு பூராகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் இச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கும் சுலபமான முறையில் மிதிவெடிகளை அகற்றவும் அவை புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பான வரைபடங்கள் தேவை என்பதால் இதுகுறித்த 3ஆயிரம் வரைபடங்களை படையினர் தற்பொழுது தந்துதவியுள்ளனர்.

பல்வேறு இடங்களிலும் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் படையினரும் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (தி-4)

# வேலை வாய்ப்புக் கருதி 150 பேர் கொரியா பயணம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வேலை வாய்ப்புக்காக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வோரின் தொகை கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு 40சத வீதத்தால் அதிகரித்துள்ளதுடன், வெளிநாடுகள் பலவற்றுக்கும் வேலை வாய்ப்புக்காகச் செல்வோரின் தொகையும் கடந்த ஆண்டை விட 20வீதத்தால் இவ்வாண்டில் அதிகரித்துள்ளதாக வெளிநாடுகளில் தொழில் பெறு நர் நலன்புரி அதிகாரி லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தென்கொரியா, இத்தாலி, சைப்பிரஸ் ஆகிய நாடுகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையரின் தொகை இவ்வாண்டு கணிசமாக அதிகரித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் மேலும் 150பேர் கொரிய நாட்டுக்கு வேலை வாய்ப்புக்காகச் செல்லவுள்ள அதேநேரம், அடுத்த யூன் மாதத்திற்குள் மலேசியாவுக்கு மேலும் 300பேர் வேலைவாய்ப்புக்காகச் செல்லவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-18,61)

# மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இசைத்




துறை மாணவனும் கலாபூசணம் க.ப.சின்னராசாவின் மாணவனுமான துரைசிங்கம் சுபேஷின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற் செல்வன ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐய ரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா மற்றும் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் நா.வி.மு.நவரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகளும், பண் ணாகம் விசுவத்தனை முருக மூர்த்தி ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.மு.ரவிக் குருக்களும் வழங்க வுள்ளனர்.

அத்துடன், வாழ்த்துரையை [illegible]. மேற்கு பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் மற்றும் சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலய அதிபர் ச.கைலாசநாதனும் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் எம்.சிதம்பரநாதனும் நிகழ்த்தவுள்ளனர். (தி)

புதிதாக அமைக்கப்பட்டுவரும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகக் கட்டடத்தின் முகப்புத் தோற்றத்தைப் படத்தில் காணலாம். (படம்:- ஞா.செந்தமிழ்ச்செல்வன்)



# இலங்கை கிரி. அணியின் சிம்பாப்வே விஜயம் இரத்து

சிம்பாப்வே நாட்டில் நிலவி வரும் பதற்றநிலை காரணமாக அங்கு கிரிக்கெற் விஜயத்தினை மேற்கொள்ளவிருந்த இலங்கை 'ஏ' அணி அதனை இரத்துச் செய்துள்ளது.

இலங்கை 'ஏ' அணி அடுத்த வருடம் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சிம்பாப்வேக்கான கிரிக்கெற் விஜயத்தினை மேற்கொள்ளவிருந்தது தெரிந்ததே.

இலங்கை அணியின் விஜ யம் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து வேறொரு கிரிக்கெற் அணியை அழைப்பதற்கான முயற்சிகளில் சிம்பாப்வே கிரிக்கெற் சங்கம் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை 'ஏ' அணி அதன் மேற்படி கிரிக் கெற் விஜயத்தினை இரத்துச் செய்துள்ள நிலையில், இலங்கை சிரேஷ்ட அணியும் எதிர்வரும் வருடம ஏப்ரல், மே மாதப் பகுதி யில் சிம்பாபவேக்கு மேற் கொள்ள விருந்த கிரிக்கெற் விஜயமும் கேள்விக் குறியாகி யுள்ளது. (உ-68)

# ஊக்க மருந்து பாவிக்கும் கால்பந்தாட்ட வீரர்களுக்கு ஆயுட்காலத் தடை விதிப்பு

கால்பந்தாட்ட வீரர்கள் ஊக்க மருந்து உட்கொண்டது கண்டு பிடிக்கப்பட்டால், அவர்களுக்கு ஆயுட்காலத் தடை விதிப்பது குறித்து சர்வதேச கால்பந் தாட்ட சம்மேளனம் கவனம் செலுத்துமென அதன் தலைவர் செப்பிளட்டர் கூறியுள்ளார்.

இதேவேளை, அண்மைக் காலங்களில் கால்பந்தாட்டத் துறையிலும் ஊக்க மருந்துப் பாவனைகள் தலைதூக்கியுள்ளதாக ஒப்புக்கொண்டுள்ள செப் பிளட்டர் கால்பந்தாட்ட வீரரான றியோ பேடினன் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கருத் துக்கள் நியாயமானவை என கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில்,

றியோ பேடினன் தம்மீது சுமத்தப்பட்டுள்ள ஊக்க மருந்து தொடர்பான மருத்துவப் பரிசோதனைக்கு பிரசன்னமாவதை கடந்த மாதம் தவிர்த்திருந்தார். அவர் தொடர்பான விசாரணைகள் முடிவுறும்வரை அவருக்கு தடைவிதிக்கப்படவேண்டும். பேடினன் விளையாடிய இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகமான மான்செஸ்டர் யுனைட் டட் கழகம் ஈட்டிய வெற்றியும் கேள்விக்குறியாகியுள்ளது.

வீரர் ஒருவர் மீது ஊக்க மருந்துப் பாவனை தொடர்பில் குற்றம் சாட்டப்படும் போது அவர் மருத்துவப் பரிசோத னைக்கு முகம் கொடுக்க மறுப பது அல்லது தவிர்ப்பது சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தவறு அல்ல அது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கவனயீனம் என்று பிளட்டர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-68)



அபுதாபில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 20வயதுக்குட்பட்டோருககான சர்வதேச கால்பந்துப் போட்டியில், ஸ்பெயினை 1:0எனத் தோற்கடித்து கைப்பற்றிய உலகக் கிண்ணக் கோப்பையுடன் பிறேசில் வீரர்கள்.

# விளையாட்டுச் செய்திகள்

## அவுஸ்திரேலிய – இந்திய 3வது டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன்சிங் பங்கேற்பாரா?

இந்திய கிரிக்கெற் அணி யின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான ஹர்பஜன்சிங்கின் வலது கையில் மேற்கொள்ளப் பட்ட சத்திரசிகிச்சை வெற்றிகர மாக முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இவரது ஆரோக்கிய நிலைபற்றி மெலபோனில் அடுத்தவாரம் பரிசலிக்கப்படவுள்ளது.

அவுஸ்திரேலிய அணிக்கெதிராக, இரண்டு வருடங்களின் முன்னர் இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் மொத்தமாக 32 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியிருந்த ஹர்பஜன் சிங், தற்போது அவுஸ்திரேலி யாவில் நடைபெற்று வருகின்ற டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் திறமையாகப் பந்து வீசவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், வலது கையில் ஏற பட்டுள்ள உபாதையினை அடுத்து அவுஸ்திரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி யில் ஹர்பஜன்சிங் பங்கேற்க வில்லை. இதேவேளை, இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான 3வது டெஸ்ட் போட்டி இம்மாதம் 26ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் மெல்போன் நகரில் ஆரம்ப மாகவுள்ளது குறிப்பிடத்தக் கது. (உ-68)

## கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கான கூட்டம் இன்று மு.ப.10.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் 2004ஆம் ஆண்டுக்கான பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான போட்டி நிரல்கள் தயாரிக்கப்படவுள்ளன. ஏற்கனவே விண்ணப்பங்களை பெற்றுக்கொண்ட கழகங்கள் அதனைப் பூரணப்படுத்தி அன்றைய தினம் கொண்டுவருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளாத விளையாட்டுக் கழகங்கள் அன்றைய தினமே பூரணப்படுத்தி யும் கலந்து கொள்ளவும் முடி யும். அதன் பின்னர் சமர்ப்பிக் கும் எந்தவொரு விண்ணப்ப மும் ஏற்றுக்கொள்ளப்பட மாட் டாது என தென்மராட்சி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் செ.சதீஸ்குமார் தெரிவித்துள்ளார். (தி-68)

# நக்கீரன் கோபாலின் விடுதலைக்கு எதிராக தமிழக அரசு மேன்முறையீடு

(சென்னை)

பத்திரிகையாளர் நக்கீரன்கோபாலின் விடுதலையை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் 253 நாட்கள் சிறைவாசத்தின் பின்னர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆயுதங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் துண்டுப் பிரசுரங்களை வைத்திருந்ததாக கூறி நக்கீரன்கோபால் கடந்த ஏப்பிரல் மாதம் 11ஆம திகதி இரவு தமிழகப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இவரைப் பிணையில் விடுதலை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த சென்னை உயர் நீதிமன்றம், நக்கீரன் கோபாலைப் பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டது.

இந்த உத்தரவு வழங்கப்பட்ட பின்னரும் நக்கீரன்கோபால் விடு



விக்கப்படாததால் அவரது அலுவலக ஊழியர்கள் சென்னை மத்திய சிறைக்கு முன்பாக நேற்றுமுன் தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்ட நக்கீரன்கோபால் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், தமது விடுதலைக்காகப்பாடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். அத்துடன், நக்கீரன் இதழில் தர்மமும் சத்தியமும் நிறையவேகாணப்பட்டதாலே உயர் நீதி மன்றத்தால் நல்லதொரு தீர்ப்பு வழங்கப்பட்டது என்றார்.

இதற்கிடையில் இத் தீர்ப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்நாடு அரசினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு எபோது விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் படும் என்பது தெரியவரவில்லை.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், தாயப்பன், பாவாணன் ஆகிய நால்வரையும் சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 18 ம் திகதி பிணையில் விடுதலை செய்திருந்தமை தெரிந்ததே. (தி-2)



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வத்திக்கான் நகரில் உள்ள சென் பீற்றர்ஸ் சதுக்கத்தின் அருகே அமைக்கப்பட்டுள்ள மின்னொளி வீசும் கிறிஸ்மஸ் மரம்.



எதிர் முனையில் பேசுவோரின் முகத்தை மிகத் தெளிவாகக் காட்டும் நவீன செல்போன். மற்ற செல் போன்களை விட 40 மடங்கு அதிகமான வேகத்தில் செய்திகளைப் பெற்றுத் தரும். டோக்கியோவில் கடந்த வியாழக் கிழமை அறிமுகப் படுத்தப் பட்டஇந்த செல்போனின பெயர் போமா.

## திக்ரித் நகரில் இடம்பெற்ற துப்பாக்கி வேட்டுக்கு பொலிஸார் மூவர்பலி

(திக்ரித்)

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் சொந்த ஊரான திக்ரித் நகரில் அமெரிக்க இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 3 ஈராக்கிய பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் சந்தேகத்திற்கு இடமான 2 கார்கள் மீது அமெரிக்க இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே 3 ஈராக்கிய பொலிஸாரும் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் தவறுதலாகவே இடம்பெற்றுள்ளதாகவும், இப் பகுதிகளில் இரவு வேளைகளில் அதிகமான கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (தி-2)

WORLD NEWS உலக தரிசனம்

## குண்டுவெடிப்பில் 23பேர் காயம்

(ப்யூனஸ்அயர்ஸ்)

ஆஜென்டினாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றின் போது இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 23 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலற்றோர் கலந்து கொண்டனர்.

தொழில் வாய்ப்புக் கோரியும் சமூக நியாயம் கோரியுமே இந்த எதிர்ப்பு அர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஊர்வலம் ஜனாதிபதி மாளிகையை அண்மித்தபோதே இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (தி-2)

## ஸ்பெயின் பிரதமர் அஸ்வர் ஈராக்கிற்கு திடீர் விஜயம்

### தன்னாட்டுப் படைகளை குஷலம் விசாரிக்கவாம்

(பக்தாத்)

ஸ்பெயின் பிரதமர் ஜோஷ் மாரியா அஸ்வர் ஈராக்கிற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலின் பின்னர் முதற்தடவையாக அவர் இந்தத் திடீர் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஈராக்கின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் தமது நாட்டுப் படைகளைச் சந்திக்கவே அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

குவைத் ஊடக விஜயம் செய்யும் இவர் பக்தாத்தின் தெற்குப் புறமான டிபானியாவில் நிலை கொண்டுள்ள ஸ்பெயின் துருப்பினரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

தனது நாட்டு மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் ஸ்பெயின் அரசு ஆயிரத்து 200 படைகளை ஈராக்கிற்கு அனுப்பிவைத்திருந்தமை தெரிந்ததே. (தி-2)

## லிபியாவின் முடிவுக்கு சீனா பாராட்டு

(பெய்ஜிங்)

தடைசெய்யப்பட்ட பேரழிவுதரும் ஆயுத உற்பத்திகளை கைவிட லிபியா எடுத்த தீர்மானத்துக்கு சீனா பாராட்டுத் தெரிவித்துள்ளது.

லிபியாவின் இப் புதிய தீர்மானம் அந்த நாட்டின் இராஜதந்திர உறவுகளில் வளர்ச்சியை ஏற்படுத்தும் என்று சீனா கூறியுள்ளது.

உலக நாடுகளின் ஒத்துழைப்பு வேண்டி லிபியா எடுக்கும் எந்த வித தீர்மானத்திற்கும் சீனா ஒத்துழைப்பு வழங்குமென்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பேரழிவு தரும் ஆயுதங்களை விருத்தி செய்யும் தனது திட்டங்களைக் கைவிடுவதாக லிபியா கடந்த 19 ஆம் திகதி அறிவித்தது.

கடந்த 9 மாதங்களாக மேற்குலக நாடுகளுடன் நடத்திய இரகசியப் பேச்சுக்களையடுத்தே லிபியத் தலைவர் கடாபி மேற்படி அறிவிப்பை விடுத்திருந்தார். (தி-2)

## எமது கட்சி எடுத்த முடிவில் மாற்றம் எதுவுமில்லை

### தி.மு.க. அமைச்சர்கள் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்நத மத்திய அமைச்சர்கள் டி.ஆர். பாலுவும், ஏ.ராஜாவும் தங்களது இராஜினாமாக் கடிதங்களை பிரதமர் அடல்பிஹாரி வாய்பாயிடம் நேரடியாக சமர்ப்பித்துள்ளனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம பேசிய டி.ஆர்.பாலு கட்சித் தலைவரின் கட்டளையை தாம் செயற்படுத்தியுள்ளதாகவும் தமது கட்சி எடுத்துள்ள முடிவை மாற்றும் பேச்சுக்கே இடமில்லையெனவும் கூறியுள்ளார்.

இதனிடையே தி.மு.க.வின் முடிவை மறுபரிசீலனை செய்யும் பணி வாஜ்பாய்அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணியின உறுப்பினரும் பாதுகாப்பு அமைச்சருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தி.மு.க.தலைவர் கருணாநிதியுடன் நேற்று முன்தினம் தொடர்பு கொண்டு பேசிய போது,

மத்திய அமைச்சரவை உறுப்பினர் டி.ஆர். பாலுவுடன் இந்த இராஜினாமாக் குறித்துப் பேச்சு நடத்தப் போவதாக கூறியுள்ளார். (தி-2)

## கம்போடியப் படுகொலைகளுக்கு எதிரான விசாரணைகளுக்கு ஆஸி. நிதி உதவி

(கான்பரா)

1970 ஆம் ஆண்டில் கம்போடியாவில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளுடன் தொடர்புபட்ட கமரூஜ் தலைவர்களுக்கு எதிராக நடைபெறவுள்ள நீதிமன்ற விசாரணைகளுக்கான செலவுகளை ஏற்க அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது.

“சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்” என அழைக்கப்படும் இந்த மன்றிற்கு 11 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அவுஸ்திரேலியா இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த நீதிமன்றத்திற்கு நிதி உதவி வழங்க முன்வந்துள்ள முதலாவது நாடு அவுஸ்திரேலியா என்பது குறிப்பிடத்தக்கது.

கம்போடியாவின் அப்போதய தலைவராக இருந்த பொல்பொட்டின் கீழ் இயங்கிய அதிகாரிகள் நடத்திய கொடூரமான வன்முறைகளில் சுமார் 17 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

எனினும் இவர்கள் தொடர்பான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை.

ஐக்கிய நாடுகளும் கம்போடியாவும் சுமார் 6 வருடங்கள் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக கமரூஜ் தலைவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கான இணக்கப்பாடு கடந்த மார்ச் மாதம் காணப்பட்ட போதும், விசாரணைகளுக்கான நிதிப்பிரச்சினை காரணமாக அதனைக் கம்போடியா ஒத்திவைத்தது தெரிந்ததே. (தி-2)



சீன ஜோதிட நாட்காட்டியின் படி 2004ஆம் ஆண்டு குரங்குகள் ஆண்டாக கடைப்பிடிக்கப்படவுள்ளது. இந்நிலையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள பொழுதுபோக்கு பூங்கா ஒன்றில், சாண்டா கிளாஸ் வேடமணிந்து பார்வையாளர்களை வரவேற்கும் 5 மாத வயதுடைய குரங்கு.

## வலம்புரியின் 4வது ஆண்டு நிறைவு

# கவிதை மேலை

### மகிழ்வினில் சூட்டினோம்

எங்கும் புகழ் கொண்டு
எழில் பொங்கு யாழ்நகரில்
தங்கும் புகழ் கொண்டு
தமிழ் மக்கள் தலைநிமிர
பொங்கு தமிழ் உணர்வை
பொறித்து நிற்கும் வலம்புரியே!
நடுவு நிலை தவறா நன்னெறியைக்
காத்து நிற்கும்
கூறவொண்ணா
வான்பரிதி நீயன்றோ!
அகவை நான்கை
அமைதியாய் நீ கடந்து
உவகை பொங்க
எம் கரத்தே நீ இன்று
நல்லை முருகன்
அருள்பார்வை நீபெற்றாய்!
சொல்லி முடியுமோ
உன்புகழை நாமிங்கு
இறைவன் திருவருளால்
இன்பத் தமிழ்மலரால்
மாலை ஒன்று கட்டி வந்து
மகிழ்வினில் சூட்டிநின்றோம்.

ஆனையூர் இராசேந்திரம்

### வீறுநடை போடு

ஆழ்கடலில் தேடிக்
கண்டெடுத்த செல்வமே
திரவியமே வலம்புரியே
ஆண்டில் குழந்தையடா
நீ எனக்கு
அறிவில் குழந்தையடா
நா உனக்கு
வாழ்த்தலுக்கும் வைதலுக்கும்
போற்றலுக்கும் செவிசாய்த்து
வீறுநடை போடு மகனே.

செல்வி.

### வாழ்த்தி மகிழ்கின்றோம்!

தமிழ்க்கடல் மூழ்கிக் கிடந்த வலம்புரி
நாம் செய்த தவத்தால் எம் மண்
நலமுடன் தழைத்திடவே நற்செய்திகள்
தந்தாய் எம்முடன் பிறந்து மெல்ல மெல்ல
வளர்ந்தாய் மூத்த குடியினர் முடிபுனைந்தேத்திய
முத்தமிழின் சீர் பேர்பாடி பத்திரிகா தர்மம் காத்து
நாளும் பாரில் நிகழ் பல செய்திகளை சத்தியத்தின்
நெறி பற்றி சீராய் சமன்செய்யும் துவா கோலென
முத்திரை பதித்து சுவை மிகு முக்கனியென சுந்தரமொழிக்கு
முத்தாரம் சூட்டிமகிழும் வலம்புரியே நான்காம்
ஆண்டை நிறைவுசெய்து இத்தரவையில் ஈடில்லா
பணி செய்தே இமயமென வளர்கிறாய் இந்நாளில்
நாங்கள் எல்லாம் இனிதாய் வாழ்த்தி
மகிழ்கின்றோம்.

ஆ.யோகினி
A/L கலைப்பிரிவு,

## நாவற்குழி வீடமைப்புத் திட்டம்

# பாதிக்கப்பட்ட 168 வீடுகள் அரச அதிபரின் பொறுப்பில்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளாகியுள்ள நாவற்குழி வீடமைப்புத்திட்டத்தின் 168 வீடுகளை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பொறுப்பேற்றுள்ளார்.

அரச அதிபரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள இவ் வீடுகள் அனைத்தையும் புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான நிதியுதவி கிடைக்கப்பெற்றதும் அவை புனரமைப்புச் செய்யப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சொந்த வீடுகளற்ற குடும்பங் களுக்கு வழங்கப்படவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாவற்குழி வீடமைப்புத் திட்டத்திலுள்ள 130 வீடுகள் ஏற்கனவே வீடமைப்பு அதிகார சபையால் பொறுப்பேற்கப்பட்டு ஏலத்தில் விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(உ-3,7)

## ஜே.வி.பி., சு.க. கூட்டுக்கு...?!




# செய்தித் துளிகள்

### சப்பாத்து வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடமைபுரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு, இவ் வருடத்திற்கான சப்பாத்துக்கள் இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவர்களுக்கான சீருடைத் துணிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன. (உ-3,7)

### விளையாட்டு வினையாகி சிறுவன் பரிதாப மரணம்

(மருதங்கேணி)

ஏணையில் ஏறிவிளையாடிய விளையாட்டு விபரீதமானதில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமானமுறையில் உயிரிழந்துள்ளான்.

கடந்த செவ்வாயன்று தருமபுரம் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ரங்கநாதன் விதுசன் (வயது - 9) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது, ஏணையில் ஏறி சுற்றி விளையாடிய போது, அது கழுத்தில் இறுக்கியதில் மூச்சுத்திணறி மயக்கமடைந்த சிறுவனை உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளதாகத் தெரியவருகிறது. (தி-35)

### மின் விளக்கு பழுது

(வண்ணார்பண்ணை)

வைத்தீஸ்வராச் சந்தி சிவன் பண்ணை வீதியில் அமைந்திருக்கும் மின் விளக்கு நீண்ட காலமாகப் பழுதடைந்து காணப்படுகின்றது.

இது பற்றி மின்சார சபைக்கு பல தடவை அறிவித்தும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதனால், இரவு வேளைகளில் போக்குவரத்தில பெரும் இடையூறு எதிர்நோக்கப்படுகிறது. (உ-62)

### பயிற்சி நெறி

(சுண்டுக்குளி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவர்களுக்காக தென்மராட்சி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள தலைமைத்துவப் பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை முதல் 3 நாட்களுக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் தினமும் காலை 9.00 மணிமுதல் பி.ப 4.30 மணிவரை நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில்,

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி மாவட்ட அலுவலர் எஸ்.செல்வரத்தினம் மற்றும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் எஸ்.நாகேந்திரராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-110)

### வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி சாரணர்கள் மற்றும் பரியோவான் முதலுதவிப்படை அங்கத்தவர்கள் ஆகியோருக்கான விஷேட பயிற்சிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, மேற்குறிப்பிடப்பட்டோர் இன்று திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்மத்திய கல்லூரிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் க.இராஜதுரை கேட்டுள்ளார். (தி-18)

### சமுர்த்தி வங்கி கட்டடத் திறப்பு விழா

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் சாவகச்சேரி நுணாவில் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள சமுர்த்தி வங்கிக் கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.(தி-36)

### திறப்பு விழா

சாவற்கட்டில் விதவைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள "தாரகா" கட்டடத் திறப்பு விழா இன்று மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் விதவைகளான 40 பேர் உட்பட 92 பேரின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் இந்து கலாசார அமைச்சர் மற்றும் சமூகப் பெரியார்களின் உதவியுடன் இம் மலர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனூடாக மேற்படி விதவைகளுக்கு தையல் பயிற்சி, பன்ன வேலைப் பயிற்சி மற்றும் இளம் சிறார்களுக்கான இலவசக் கல்வி ஆகியன உட்பட மாலை நேர வகுப்புக்கள் ஆகியனவும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-252)

### நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடத்தும் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா எழுதிய 'சொல்லினால் ஒரு மாளிகை' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல்2.30 மணிக்கு எஸ். கருணாகரன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.(த)

### நோயாளர் விடுதிகள் அமைப்பு

(மருதங்கேணி)

முல்லைத்தீவில் அமைந்துள்ள கட்டம் - 1 வைத்தியசாலையில் நோயாளர்விடுதி மற்றும் வைத்தியர்களுக்கான விடுதி ஆகியன அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் 24 கட்டில்கள் போடத்தக்க வகையில் நோயாளர். விடுதியும் வைத்தியருக்கான விடுதியும் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக முல்லை மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிபபாளர் வி.வி.ஜெயகுலராஜா தெரிவித்துள்ளார்.இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-35)

### கோப்பாயில் அடிக்கடி வழிப்பறி

(கல்வியங்காடு)

கோப்பாய் தெற்கு மற்றும் இருபாலைப் பகுதிகளில் அண்மைக் காலங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இப்பகுதி வீடுகளில் நுழையும் திருடர்கள் கோழிக்குஞ்சுகளையும் துவிச்சக்கர வண்டிகளையும் திருடிச் சென்றுவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பகல் நேரவேளைகளிலும் வீதியால் செல்பவர்களிடம் திருடர்கள் வழிப்பறிக் கொள்கையில் ஈடுபடுகின்றனர். (உ-74)

### விபத்தில் காயம்

(கொழும்புத்துறை)

ஆரியகுளம சந்தியில் மோட்டார் சைக்கிளும்,சைக்கிளும் மோதியதில் ஒருவர் காயமடைந்தார்.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளை முகாமையாளரான சூசைப்பிள்ளை யேசுதாஸ் (வயது46) என்பவரே கடந்த வியாழனன்று நடந்த இவ் விபத்தில் காயமடைந்தவராவார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-51)

### பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு சனசமூக நிலையத்தின் பாலர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக செயலாளர் வி.அகிலன் அறிவித்துள்ளார். (தி-18)

### பொது மண்டபம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பருத்தியடைப்புக் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கோட்டையடிக் குடியிருப்பில் ஐக் கியநாடுகள் உயாஸ்தானிகராலய 4இலட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி உதவித்திட்டத்தின் கீழ் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுவருகின்றது. (தி-75)

### நிர்வாகசபை தெரிவு

(கல்வியங்காடு)

கோப்பாய் மத்தி வள்ளியம் மன் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

மேற்படி சனசமூக நிலைய நிர்வாக சபையின் புதிய தலைவராக செ.கந்தசாமி, செயலாளராக இ.சாந்தகுமார், பொருளாளராக த்.யோகராசா ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (தி-74)

# உள்ளூராட்சி திணைக்களத்தால் ஊழியர் விபரங்கள் சேகரிப்பு

(சுதுமலை)

அரசாங்க ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டுமுதல் வழங்கப்பட வுள்ள சம்பள அதிகரிப்பு தொடர்பாக வடக்கு -கிழக்கில் உள்ள உள்ளூராட்சிமன்ற ஊழியர்களின் விபரங்கள்,வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் சேகரிக்கப்படுகின்றன.

வடக்கு-கிழக்கில் உள்ள மாநகர சபைகள், பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள் போன்ற உள்ளூராட்சி மன்றங்களில் கடமைபுரியும் ஊழியர்களின் விபரங்களை உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களையும் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களப் பணிப்பாளர் செல்வி து.விஜயலட்சுமி கேட்டுள்ளார்.

அண்மையில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திற்கு அமைவாக, சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆயிரத்து 250ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதால், மேற்படி ஊழியர்களின் பெயர் விபரங்கள் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, மேற்படி உள்ளூராட்சி மன்றங்களில் கடமைபுரியும் ஊழியர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 25ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கில் உள்ள சகல உளளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் அறிவிககப்பட்டுள்ளது. (தி-252)

## எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மேற்படி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்கள் மற்றும் சமூகக் கல்வி, விஞ்ஞான பாட ஆசிரியர்கள் கலந்து கொள்ளமுடியும்.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் இன்று திங்கட்கிழமை வலயக்கல்விப் பணிமனையில் தமது பெயர் விபரங்களை பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (தி-103)

## கட்டாக்காலி தொல்லை

(கந்தரோடை)

மல்லாகம் பகுதிகளில் கட்டாக்காலி ஆடு மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளன.

இதனால் அப்பகுதிகளில் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (தி-103)

## பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை நலன்புரிச் சங்கத் தலைவர் எம்.பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில், இந்த ஆண்டுக் கணக்கறிக்கை, முன்னேற்றச்செயற்பாடுகள்,உத்தியோகத்தர்களின் நலன்புரிச் செயற்பாடுகள் என்பன ஆராயப்படுவதுடன்,2004ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (தி-49)

## செயலமர்வு

(கந்தரோடை)

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 மாணவர்களுக்கு சுற்றாடல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட செயலமர்வு எதிர்வரும் 24ஆம்திகதி புதன் கிழமை காலை 9.00 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (தி-103)

## விசேட கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விசேட கூட்டம் ஒன்று எதிாவரும் 24 ஆம்திகதி புதன்கிழமை மு.ப.10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலா் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இக்கூட்டம் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 2004ஆம் ஆண்டுக்கான பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வு, பிரதேச விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு அமைத்தல், உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் நடாத்துதல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாபடப்ப டவுள்ளதாகத் தெரியவருகின்றது. (தி-75)

# இலங்கை- இந்திய சுதந்திர உடன்படிக்கை விஸ்தரிப்பு

(கொழும்பு)

இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, சேவைகள், முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனால் விரிவான பொருளாதார பங்குடமை உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.


தற்போது இருநாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் பொருள்கள் சம்பந்தப்பட்ட விடயமே அடங்கியுள்ளன.

அணிசேரா நாடுகளுக்கும் ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் என ஆராய்ச்சித் தகவல்கள் அடங்கிய அறிக்கையை இந்திய வர்த்தக அமைச்சு ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்வறிக்கையில் இலங்கை-இந்திய வர்த்தக உடன்படிக்கை மற்றும் இது தொடர்பான அம்சங்கள் அடங்கியுள்ள சிபார்சுகளும் குறிபபிடப்பட்டுள்ளன. (தி-61)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

காரைநகர், களபூமி தன்னை சித்திவிநாயகர் ஆலய பரிபாலகர் காலஞ்சென்ற குமாரசுவாமி ஐயர் ஜீவரட்சாயணியம்மா தம்பதிகளின் மகனும், களபூமி சுந்தரமூர்த்தி



நாயனார் வித்தியாசாலை, பண்ணாகம் மெயகண்டான் பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவனும்,

மாவனல்லை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் பிரதம குருவாகக் கடந்த 40 ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவரும், சிறந்த சமய, சமூகப் பணிகளில் ஈடுபாடுமிக்க வருமான,

**சைவ நன்மணி பிரம்மஸ்ரீ கு.விவேகானந்த சர்மா**

அவர்கள், இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்களது சிபார்சினால் அகில இலங்கைச் சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளமையையிட்டு, அவர் பல்வளங்களும் பெற்றுப் பல்லாண்டுகள் நற்பணி புரியப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சித்திவிநாயகர் தேவஸ்தானம்
தன்னை, களபூமி காரைநகர்.

(C/6999)



## அக்குபஞ்சர் பற்றி எனது உள்ளத்திலிருந்து...

நவீன வைத்திய முறைகள் மேலோங்கி நிற்கும் இன்றைய காலகட்டத்தில் பூர்வீக வைத்திய முறை ஒன்று பிரமிக்கத்தக்க முன்னேற்றங்களை பல்வேறு நோய்களுக்கும் நிவாரணமளித்து வருகின்ற செய்தி என் அனுபவ உண்மை. கடந்த 5 வருடங்களாக முள்ளந்தண்டில் ஏற்பட்ட வலி காரணமாக தாங்கொணாத் துன்பத்திற்கு ஆளாகியிருந்தேன் . படுக்கையில் ஓய்வெடுப்பதைத் தவிர வேறு சிகிச்சை இல்லை என்ற நிலையில் எனது வீட்டுக் கடமைகளையும் ஆசிரியக் கடமைகளையும் ஆங்கில மருந்துகள், வலி நிவாரண ஊசிகளுடன கழித்து வந்தேன்.

2003 ஜனவரி மாதத்தில் அடிக்கடி படுக்கையில் துன்பப்பட்டேன். மாடிப்படிகள் ஏறும்பொழுது அதிக அளவில் நோய் வாய்ப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இருவாரங்களில் 3 தடவைகள் வலி நிவாரணி ஊசி ஏற்றி நடமாடிய நான் கல்லூரி கன்றீனில் தேநீர் அருந்திய பின் எழுந்து நிற்கவோ, நடக்கவோ முடியாத நிலையில், கன்றீனை நடத்தி வந்த திருமதி சுப்பிரமணியம் அவர்கள் தன் அனுபவங்களைக் கூறி, என்னையும் உரும்பிராயில் டாக்டர் ரகுராம் அவர்களால் நடாத்தப்படும் அக்குபஞ்சர் சிகிச்சையினை பெறுவதற்கு வழிகாட்டினார்.

சீனர் உலகிற்கு அளித்த கொடை அக்குபஞ்சர் என்றும் இந்தியர் உலகிற்கு அளித்த கொடை ஆயுள்வேதம் என்றும் கற்றுள்ளேன். கற்பித்து வருகின்றேன். ஆனால் அக்குபஞ்சர் சிகிச்சை முறையானது இவ்வளவு விரைவான நிவாரணம் தரும் சுலபமான சிகிச்சை என்பதை இன்று எனது அனுபவத்தில் கண்டுள்ளேன்.


கடந்த 8 மாதங்களாக மேற்படி சிகிச்சையினைப் பெற்று வந்தாலும் முதல்நாள் சிகிச்சையிலேயே என் நோய் மாறியதை உணர முடிந்தது. ஆனால் நான் அனுபவித்த வேதனையின் பயம் இன்றும் என்னை விட்டுப்போகவில்லை. தொடர்ந்து இரண்டு வருட காலத்திற்கு கிளினிக்முறை ஒழுங்கில் சிகிச்சை பெற்றாலேயே நிரந்தர நிவாரணம கிடைக்குமென்ற டாக்டரின் ஆலோசனைப்படி தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றேன். நான் அந்நிலையத்தில் கண்ட நோயாளிகள்- நோய்களின் தன்மைகள் பலவிதம். அவற்றையெல்லாம் இதில் விபரிப்பது இயலாத காரியம்.

எனது விரைவான சுகத்திற்கு டாக்டர் ரகுராம் அவர்களது ஆலோசனைப்படி இறுக்கமான உணவுக்கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதுடன் அச் சிகிச்சை முறையில் நான் கொண்ட நம்பிக்கையும் கடவுள் அனுக்கிரகமும்தான் காரணம் ...ர்று திடமாக நம்புகின்றேன்.

அபார சாதனைகள் படைத்துவரும் ஆங்கில வைத்திய முறைகளை குறைவுபடுத்த இச் செய்தியினை நான் வெளியிடவில்லை. இலகுவான முறையில் வாயால் எந்தவித மருந்து வகைகளையும் உட்கொள்ளத்தேவையில்லாத-மிகக்குறைந்த செலவில் பூர்வீக வைத்திய முறை ஒன்று எம் மத்தியில் பிரபல்யமடைந்து வருவதை அறியாதவர்களும் அறிந்து பயன்பெற வேண்டும் என்ற பெருவிருப்பினாலேயே இச் செய்தியினை இப்பத்திரிகையூடாக வெளியிட முன்வந்தேன்.

நன்றி

34, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில். திருமதி க. இராஜசுந்தரம்.

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட நாவலர் விழாவில், சிறப்பு விருந்தினர் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. ஸ்ரீசற்குணராசா மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: தி. உமாசங்கர்)


## மீனாவின் மூன்று விருப்பங்கள்

அலாவுதீனும் அற்புத விளக்கும் என்ற கதையினை பாட்டி ஒருநாள் சொன்னபோது மீனாவுக்கும் அவள் தம்பி ராஜுவுக்கும் ஒரே ஆச்சரியம். அன்று இரவு அலாவுதீன் பயணம் செய்த மாயக்கம்பளத்தைப் போன்ற மாயக்கம்பளமும் அற்புதவிளக்கும் தன்னிடம் இருப்பதாக மீனா கனவு காண்கிறாள். அந்த மாயக்கம்பளத்தில் அவளும், ராஜுவும், மிதுவும் உலகத்தைச்சுற்றி வருகின்றார்கள். அவர்கள் பல புதிய ஊர்களையும் ஆச்சரியம் தரும் பொருள்களையும் பார்க்கின்றார்கள்.

பல கிராமங்களில் மக்கள் நோயால் அவதிப்படுவதினை அவர்கள் காண்கின்றனா. அங்கே பிள்ளைகளுக்கு வயிற்றோட்ட நோய் காணப்படுகின்றது.

குளத்தங்கரையில் ஒரு பையன் மலம் கழிக்கின்றான். குளத்தில் வேறு பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருப்பதனையும் பெண்கள் நீர் அள்ளிக்கொண்டுபோவதனையும் அவள் பார்க்கின்றாள். ஒரு தாய் மலம்கழித்த பிள்ளையை கழுவிவிட்டுத் தன் கையைக் கழுவாமல் சமையல் வேலையைத் தொடருவதைப் பார்க்கிறாள்.

நோய்கள் எவ்வாறு உண்டாகின்றன என்பது பற்றியும் அவை எவ்வாறு பரவுகின்றன என்பது பற்றியும் மக்களுக்கு தெரியாதிருப்பதையிட்டு அவள் ஆச்சரியப்படுகின்றாள் .



**மிகுதி நாளைய வலம்புரியில்**

*உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-*

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண்—30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

unicef

(C/6946)

## இன்று ஒரு தகவல்

# படித்ததும் பார்த்ததும்

காசியில் ஒரு பண்டிதர் இருந்தார். அதிகம் படித்தவர். அவர் ஒருநாள் ஏதோ ஒரு ஊருக்குப் போய்கொண்டிருந்தார். வழியில் மழை பிடித்துக்கொண்டது. சரி மழை நிற்கும் வரையில் பக்கத்தில் எங்காவது ஒதுங்கி இருந்து விட்டுப் போவோம். என எண்ணி அங்கே இருந்த ஒரு வீட்டின் திண்ணையில் சென்றமர்ந்தார்.

அந்த வீட்டின் மாடியில் ஒரு பெண்மணி இருந்தார். அப்போது தெருவில் சிலர் ஒரு சவத்தைத் தூக்கிக் கொண்டு சென்றனர். இதைப்பார்த்த அந்தப் பெண்மணி தன் பக்கத்தில் நின்ற ஒரு சிறுமியை அழைத்தார். "இதோ பாரம்மா... இறந்து போனவர் எங்கே போகின்றார். சொர்க்கத்திற்கா? நரகத்திற்கா? என்று பார்த்து விட்டு வா!" என்று கூறினார்.

உடனே " சரி" என்று கூறிவிட்டு அந்தச் சிறு பெண்பிள்ளை வெளியே ஓடியது.சிறிது நேரத்தில் திரும்பி வந்தது. "அவர் சொர்க்கத்திற்குப் போகின்றார்" என்று கூறியது. நீண்டநேரம் ஆகியும் மழை ஓயவில்லை. பண்டிதர் இன்னும் திண்ணையில் தான் அமர்ந்திருந்தார். இப்பொது இன்னொரு சவத்தைச் . சிலர் தூக்கிக் கொண்டு அந்த வழியே வந்தனர்.

மாடியில் இருந்த பெண்மணி மீண்டும் அந்த சிறுமியைக்கூப்பிட்டார். "இதோ பாரம்மா... இப்போது தூக்கிக் கொண்டு செல்கிறார்களே, இவர் எங்கே போகிறார் என்று பார்த்துக்கொண்டுவா" என்றார். அந்தப்பிள்ளை மறுபடியும் வெளியே ஓடி மீண்டும் திரும்பி வந்தது. "இவர் நரகத்திற்குப் போகிறார்" என்றது. இவ்வளவையும் அந்தப்பண்டிதர் பார்த்தார். அவருக்கு ஒரே ஆச்சரியம், குழப்பம்.

யோசித்துப்பார்த்தார். "நானும் எவ்வளவோ சாஸ்திரம் படித்தேன். இருந்தாலும் ஒருவன் இறந்த பின்பு எங்கே போகிறான் என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை! ஆனால் இந்தச் சிறு பெண்பிள்ளை எங்கேயோ போய் திரும்பி வருகின்றது. விபரம் கூறுகின்றது. அது எப்படி? என்று யோசித்தார். ஒன்றும் புரியவில்லை. சரி... நேரில் சென்று கேட்டுவிடுவோம்" என்று எண்ணி மாடிக்குச் சென்றார்.

அந்த அம்மா இவரை வரவேற்று "என்னவேண்டும்?" என்றார். "ஒருவர் சொர்க்கத்திற்குப் போகின்றாரா?

# உடற் கல்வி டிப்ளோமாதாரிகளின் வேலைவாய்ப்பில் அமைச்சு அக்கறை

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் கடந்த 10ஆம் திகதி யாழ். கல்வி வலயத்தின் முன்னால் அடையாள போராட்டம் ஒன்றை மேற்கொண்டதைத் தொடர்ந்து, ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் உடனடியாக கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கை கொழும்பில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

அச்சந்திப்பில் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம்,உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத்தின் தலைவர் ப. தர்மகுமாரன், நிர்வாக உறுப்பினர் ஜி.டபிள்யூ. ஜெயநேசன், என். திலகராஜ் உட்பட பல கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர். இச சந்திப்பில் அமைச்சர் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு வேலை வழங்குவதில் எதுவித பிரச்சினையும் ஏற்படாது என்றும் இந்த விடயத்தில் உடனடிக் கவனம் எடுத்து வெகுவிரைவில் உள்வாங்குவதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் இக் கற்கைநெறி யாழ். மாவட்டத்திற்கு மட்டுமன்றி, இலங்கை பூராகவும் தேவையானது. இத்துறை ஆரம்பித்தது தொடர்பாக எனக்கு உத்தியோக பூர்வமான அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை. இதற்கான மேற்படிப்புக்கு என்னால் ஆன உதவிகளை வழங்குவதாகவும் கூறினார்.

கிளிநொச்சியில் நடந்த சந்திப்பில் தமிழீழ கல்விக் கழகப்பொறுப்பாளர் வெ.இளங்குமரன் உட்பட மாகாணக்கல்வி அமைச்சு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு பேச்சு நடத்தினர்.

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் போராட்டத்திற்கு இந்து கலாசார அமைச்சர், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்தனர்.அதுமட்டுமன்றி யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தனக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய நேரத்தில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளின் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் முகமாக வர்த்தமானியை மாற்றியமைக்கும் படி கோரினார்.

மீண்டும் கல்வி அமைச்சரின் செயலாளரை கடந்த 16ஆம் திகதி அன்று ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தலைமையில் சந்தித்து பேசிய பொழுது , இன்னும் 2 கிழமைகளில் திருத்தி அமைக்கப்பட்ட வர்த்தமானி வெளிவரும் என உறுதியளித்தார்.

இவர்களின் சந்திப்பின் பின்னர் தமிழர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் கூறுகையில், மீண்டும் உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் புறக்கணிக்கப்பட்டால் அவர்கள் போராட்டத்தில் குதிப்பதாக எச்சரித்துள்ளார்.

(தி)

# சமாதான முயற்சிகளில் ஸ்தம்பிதம் உலக நாடுகள் பெரும் ஏமாற்றம்

## உலக வங்கி வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான முயற்சிகள தற்போது ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால், உதவி வழங்கி வரும் வெளிநாட்டு அமைப்புக்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளதாக உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் பீற்றர் ஹரோல் தெரிவித்துள்ளார்.

இது விடயம குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்ற போர் நடவடிக்கைகளால் சேதமடைந்துள்ள வடக்கு- கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளையும் புனரமைப்புச் செய்வதற்கு உலகவங்கி உட்பட பல்வேறு அமைப்புகள் உதவிகளை வழங்கி வருகின்றன.

ஆயினும் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான முயற்சிகள் தறபோது ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதால், நாட்டின் அபிவிருத்திக்காக உதவிகளை வழங்கி வரும். வெளிநாட்டு அமைப்புகள் பலவும் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்த நிலையில் கடந்தகால போர் நடவடிக்கைகளால் பாதிப்படைந்துள்ள வட்க்கு-கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளை, அபிவிருத்தி செய்வதற்காக உலகவங்கி 30 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதுடன்,எதிர்வரும் 2005ஆம் ஆண்டுக்கான புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காகவும் நிதியை ஒதுக்கவுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவும் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு ஒன்றுபட்டு ,ஒற்றுமையுடன்

# இராசி பலன்

**22.12. 2003**

**(மார்கழி 07, திங்கள்)**

| | |
|---|---|
| சதுர்த்தசி | மாலை. 6.06 வரை |
| கேட்டை | பி.இ.03.53 வரை |
| இராகுகாலம் | 07.55-09.25 |
| சுபநேரம் | 12.25-01.55 |

**சித்தம்**

கேயோ போய் திரும்பி வருகின்றது. விபரம் கூறுகின்றது. அது எப்படி? என்று யோசித்தார். ஒன்றும் புரியவில்லை. சரி... நேரில் சென்று கேட்டுவிடுவோம்" என்று எண்ணி மாடிக்குச் சென்றார்.

அந்த அம்மா இவரை வரவேற்று "என்னவேண்டும்?" என்றார். "ஒருவர் சொர்க்கத்திற்குப் போகின்றாரா? நரகத்திற்குப் போகின்றரா? என்பதை அந்தச் சிறு பெண் எப்படிக் கண்டு பிடித்தார்?" என்றார். உடனே அந்தச் சிறுமியே இவர் முன் வந்து நின்று விளக்கம் கூறினாள். "முதலில் ஒருவரைத் தூக்கிக்கொண்டு சென்றார்களே அவர் வாழ்ந்த இடம் எதுவென்று விசாரித்துக்கொண்டு அங்கு போனேன்.

அங்கு எல்லோரும் அழுதுகொண்டிருந்தனர். மகராசா போய் விட்டாரே. எவ்வளவோ நல்ல காரியம் செய்தார். தானதருமங்கள் செய்தார். அடுத்தவர்களுக்கு உதவியாக இருந்தார். அவர் போய் விட்டாரே என்று சொல்லி அழுது கொண்டிருந்தார்கள். அதனால் அவர் சொர்க்கத்திற்கு செல்கின்றார் என்று முடிவு செய்தேன்.

இரண்டாவதாக ஒருவரின் உடலைத்தூக்கிக் கெண்டு சென்றார்களே! அவரது வீட்டையும் தேடிக்கொண்டு சென்றேன். அங்கே எல்லோரும் சந்தோஷமாக இருந்தனர். அயோக்கியன் தொலைந்தான் .நமக்கு எவ்வளவு அக்கிரமம் செய்தான். இனிமேல் நமக்குக் கவலை இல்லை என்று கூறி எல்லோரும் சந்தோஷப்பட்டனர். அதனால் அவர் நரகத்திற்குப் போகிறார் என்று முடிவு செய்தேன்" என்றார் அந்தச் சிறுமி.

இதைக்கேட்டதும் அந்தப பண்டிதருக்குத் தான் படித்த விடயம் நினைவிற்கு வந்ததாம். அதாவது நல்ல காரியங்கள் செய்பவர்கள் நல்ல கதியடைகிறார்கள்" என்று படித்தது நினைவுக்கு வந்ததாம். என்ன படித்து என்ன பயன்? படித்த விடயம் நினைவுக்கு வர ஒரு சிறுமியின் உதவி தேவைப்படுகிறதே!

நரகத்திற்குப் போய்ச் சேர்ந்த ஒருவன் தன் பக்கத்தில் இருந்தவனிடம் பேசிக்கொண்டிருந்தான். "இறந்தபோது எனது ஊரில் பலர் கூடி அழுதார்கள். இருந்தாலும் நான் சொர்க்கத்திற்குப் போகவில்லை. நரகத்திற்குத்தான் வந்து விட்டேன்" என்றான். ஏனென்று கேட்டான் மற்றவன். "அழுதவர்கள் அத்தனை பேரும் எனக்குக் கடன் கொடுத்தவர்கள் " என்றான் இவன்.

***தென்கச்சி கோ. சுவாமிநாதன்***

**22.12. 2003**

**(மார்கழி 07, திங்கள்)**

| | |
|---|---|
| **சதுர்த்தசி** | **மாலை. 6.06 வரை** |
| **கேட்டை** | **பி.இ.03.53 வரை** |
| **இராகுகாலம்** | **07.55-09.25** |
| **சுபநேரம்** | **12.25-01.55** |

**சித்தம்**

### மேடம்
பிரயாண பயம், காரிய தாமதம், போசன சுகம், நோட்டமிடல்.

**இடபம்**
சௌக்கிய விருத்தி, போச சுகம், வாகன நன்மை, முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
ஜனவசியம், தொழில் விருத்தி, காரிய நன்மை, பொருள்சேர்க்கை.

**கடகம்**
வியாபார விருத்தி, தொழில் மந்தம், குடும்ப நலம், உடல் நலக்குறைவு.

**சிங்கம**
மனச்சோர்வு, காரிய தாமதம், மாதா சுகம், புதிய விடயம்.

**கன்னி**
நல்ல முயற்சி, தொழில் நன்மை, வாக்கு மேன்மை, தனலாபம்.

**துலாம்**
அதிசய நிகழ்ச்சி, காரிய தாமதம், பிறர் உதவி, தனவிரயம்.

**விருச்சிகம்**
கல்வியில் ஆர்வம், செய்தொழில் நன்மை, முயற்சி கைகூடும், போசன சுகம்.

**தனுசு**
காரிய அலைச்சல், சயன சுகக்குறைவு, தனவிரயம், உறவினர் வெறுப்பு.

**மகரம்**
நல்ல காரியம், பெருமையான சம்பவம், உறவினர் சந்திப்பு, பொருள் சேர்க்கை

**கும்பம்**
மேன்மை, தொழில் முன்னேற்றம், புதிய விடயம், முயற்சி பலிதம்.

**மீனம்**
தொழில் கஷ்டம், பிரயாண நன்மை, காரிய தாமதம், மனப்பதற்றம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

நாட்டின் ஏனைய பகுதிகளை, அபிவிருத்தி செய்வதற்காக உலகவங்கி 30 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதுடன,எதிர்வரும் 2005ஆம் ஆண்டுக்கான புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காகவும் நிதியை ஒதுக்கவுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவும் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு ஒன்றுபட்டு ,ஒற்றுமையுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இங்குள்ள அரசியல் நெருக்கடியை விரைவில் முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்பதே உலக நாடுகளின் விருப்பம் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜெரமி காட்டர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி-18,61)

## 5096 வெடிபொருள்கள் இதுவரை வன்னியில் மீட்பு

(கிளிநொச்சி)

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வன்னிப்பகுதியில் இம்மாதம் 19 ஆம்திகதி வரை 5 ஆயிரத்து 96 வெடிபொருள்கள் அகற்றி அழிக்கப்பட்டுள்ளன.

வன்னிப் பிரதேசத்தில் படையினர் மேற்கொண்ட படை நடவடிக்கைகளின் போது, இப்பிரதேசத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் மற்றும் வெடி பொருள்கள் தற்போது மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் புதைக்கப்பட்ட 265 எறிகணைகள், ஆயிரத்து 360 மிதிவெடிகள், 2 ஆயிரத்து 500 ரவைகள் அடங்கலாக 5 ஆயிரத்து 96 வெடி பொருள்கள் இதுவரை அகற்றப்பட்டுஅழிக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-64,8)

## 24 கொள்ளை,கொலைகளுடன் தொடர்புடைய இருவர் கைது

(கொழும்பு)

24 பாரிய கொள்ளை மற்றும் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை கொழும்பு கொள்ளுப்பிட்டியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெல்லம்பிட்டிய ,நவகமுவ,பியகம, கிரான்பாஸ், முல்லேரியா, மகரகம போன்ற இடங்களில் கொள்ளையிட்ட தங்கநகைகள் மற்றும் பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன்,

கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தி வந்த 4 மோட்டார் கார்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதால், மேலும் பல கொள்ளையர்கள் தொடர்பான தகவல்களைப் பெற முடியும் என கொள்ளுப்பிட்டடியப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (தி-61)

*பகையகத்துச் சாவார் எளியர் அரியர் அவையகத்து அஞ்சா தவர் — குறள்*

வலம்புரி

## யார்க்கெடுத்து உரைப்போம்

யுத்தத்தால் அழிந்து போன வடபகுதியில் ஜீவனோபாயத்துக்கே மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இதை விட தங்களின் நாளாந்த வாழ்வியல் செயற்பாடுகளில் ஏற்படுகின்ற சிக்கல்கள், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போதிய உதவிகளும், வழிகாட்டல்களும் இவர்களுக்கு கிடைப்பதில்லை.

குறிப்பாக வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களின் அவலநிலை பரிதாபத்திற்குரியது. தமக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல்-தமது மன ஆதங்கங்களை ஆற்றுப்படுத்த இயலாமல் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். அதிகாரிகள் தரப்பில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் கூட தட்டிக்கழிக்கப்படுகின்றன. எங்கும் நிதானமற்ற செயற்பாடுகள்-பொறுமையற்ற கடமைக் கழிப்புகள். இதன் காரணமாக ஏழைமக்களும், கல்வியறிவில் பின்தங்கிய மக்களும் அனுபவிக்கும் கஷ்டங்கள் சொல்லுந் தரமன்று.

இது ஒருபுறம், மறுபுறத்தில் வேலைவாய்ப்பின்றி வீணே காலம் கழிக்கும் இளைஞர் யுவதிகள், பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலைக்காக காத்திருப்போர் இப்படியே மனித மூலதனம் முடங்கிப் போயுள்ளது. பல்கலைக்கழகங்களில் நான்கு ஆண்டுகள் கல்வி கற்றுவிட்டு நான்கு, ஐந்து ஆண்டுகள் வேலைவாய்ப்பின்றி இருப்பவர்கள், செய்தால் அரசபணி இல்லையேல் சும்மா இருப்போம் என்பதுபோல் அவர்களின் அறிவியல் வளம் வீணாக்கப்படுகிறது. இவற்றுக்கெல்

# பாதுகாப்புக் கடமைகளின்போது பொலிஸும் இராணுவமும் இணையவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

(கொழும்பு)

நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில்



பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஓய்வுபெற்ற இராணுவ உயர் அதிகாரிகளுடனான சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், நாட்டின் பாதுகாப்பு தொடாபான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது அரசியல் பேதங்களுக்கு இடமளிக்கக்கூடாது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தேசிய பாதுகாப்புக் கொள்கையைத் தொடர்ந்தும் உரியவாறு கடைப்பிடிக்க வேண்டும்.

அந்தவகையில் நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர் பான செயற்பாடுகள் அனைத்தையும் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் நாட்டில் இராணுவமும் பொலிஸாரும் ஒன்றிணைந்து செயற்படாத காரணத்தினாலேயே அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் இயங்கிவந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இரகசியக் களஞ்சிய அறை அண்மையில் வெளியானது எனவும் குறிப்பிட்டுள்ளார். (தி-18,61)

### தொலைபேசி தொடர்பு அவுட்

கல்வியங்காட்டு சந்தைப் பகுதியிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் கடந்த இருதினங்களாக தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

கடந்த 19ஆம் திகதி மேற்படி பகுதியில் நடைபெற்ற சிற்றூர்தி விபத்தில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமான தந்திக்கமபம் ஒன்று சரிந்து வீழ்ந்தது.

இதனால் அப்பகுதிகளில் உள்ள தொலைத்தொடர்பு நிலையங்களின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தமது தொலைபேசித தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாது வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை தற்போது தோன்றியுள்ளது. (தி-4)

## குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க தொலைத் தொடர்பு வலையமைப்பு

கொழும்பு போன்ற முக்கிய பகுதிகளில் அதிகரித்துவரும் குற்றச் செயலகளைத் தடுப்பதற்காக நகரின் சகல பொலிஸ் நிலையங்களிலும் ஒரே நேரத்தில் தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் புதிய தொலைத்தொடர்பு வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் கொழும்பு பிராந்தியத்தற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களை அங்குள்ள 19 பொலிஸ் நிலையங்களிலும் ஒரே நேரத் தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

இவற்றில் 6 பொலிஸ் நிலையங்களில் குற்றத் தடுப்புப் பிரிவுகளும், ஏனைய 13 நிலையங் களில் போதைப்பொருள் பாவனை தடுப்புப் பிரிவினரும் இயங்கி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (தி)

## நத்தார் பண்டிகையை முன்னிட்டு போக்குவரத்து விதிகள் கடுமை

(யாழ்ப்பாணம்)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரில் வீதிப் போக்குவரவு நடைமுறைகள் கடுமையான முறையில் கண்காணிக்கப்படும் என யாழ்.பொலிஸார் அறிவித்துள் ளனர்.

நத்தார் பண்டிகைக் காலம் நெருங்கிக்கொண்டிருப்பதால் நகரில் பல்வேறு தேவைகளை யும் நிறைவேற்றுவதற்காக யாழ். நகரப் பகுதியில் மக்கள் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் வீதிவிபத்துக்கள் ஏற்பட கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுவதால் நகரில் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் ஒருவழிப்பாதை நடைமுறை கள் மற்றும் தடைசெய்யப்பட்ட இடங்களில் வாகனங்களை தரித்தல், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் உரிமங்கள் இன்றி வாகனம் செலுத்துதல், மதுபோதையில் வாகனம் ஓட்டுதல் என்பன கடுமையான முறையில் கண்காணிக்கப்படும். இவற்றை மீறுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் எனவும் யாழ். பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

(தி-4)

## வைத்தியர் வெட்டிக் கொலை வாதுவையில் சம்பவம்

(கொழும்பு)

நோயாளர்கள் போல் வந்த இருவர் வைத்தியரை கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை

அமைத்து தொழில் புரிந்து வந்தார்.

கடந்த சில நாட்களாக மேற்படி வைத்தியரை ஆயுதக்குழு

## அரசியல்வாதிகள் கலந்துகொள்ளும் கூட்டங்களை பகிஷ்கரிக்க பிரதேச செயலர்கள் தீர்மானம்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் கலந்துகொள்ளும் சகல கூட்டங்களையும் நிகழ்வுகளையும் பகிஷ்கரிக்க பிரதேச செயலாளர்களும் உதவிப் பிரதேச செயலாளர்களும் தீர்மானித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜயபானவும், அவரது ஆதரவாளர்களும், புளொட் சிங்களப் பிரதேசச் செயலாளரைத் தாக்கிய சம்பவத்தையடுத்தே இந்தக் தீர்

ரணுக்கே இது குறித்து கருத் துத் தெரிவிக்கையில், இச் சம்ப வம் குறித்து அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை நிர்வாக அதிகாரிகளை அதிருப்திக்கு உள்ளாக்கி உளளது.

சகல மாவட்டப் பிரதேச செயலகங்களிலும் இச் சம்பவம் தொடர்பான ஆட்சேப ஆர்ப்பாட்டம் ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி நடாத்தப்படவுள்ளது.

அத்துடன்,மேல் நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக இம்

காத்திருப்போர் இப்படியே மனித மூலதனம் முடங்கிப் போயுள்ளது. பல்கலைக்கழகங்களில் நான்கு ஆண்டுகள் கல்வி கற்றுவிட்டு நான்கு, ஐந்து ஆண்டுகள் வேலை வாய்ப்பின்றி இருப்பவர்கள், செய்தால் அரசபணி இல்லையேல் சும்மா இருப்போம் என்பதுபோல் அவர்களின் அறிவியல் வளம் வீணாக்கப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் தீர்வு காணப்படவேண்டுமாயின் வடபகுதியில் தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். இவ்வாறு தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படுவதன்மூலமே வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். எனினும் அத்தகையதொரு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

ஆக, ஏதோ சுயதொழில் முயற்சிகள் என்று கூறிக்கொண்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படாமல் போவதால், அவைகூட எந்தப்பயனும் இலலாமல் முடிந்துவிடுகிறது. இதனால், வடபகுதியில் வாழுகின்ற பெரும்பாலான மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ்ப்பட்டவர்களாக-நிவாரணக் கொடுப்பனவுகளில் தங்கி வாழவேண்டியவர்களாக உள்ளனர்.

இந்நிலைமை தொடர்ந்தும் நீடிப்பது ஓர் இனத்தின் எதிர்கால ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல என்பதால், வடபகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு முதலீடுகளை வடபகுதிக்கு நகர்த்திவர முயற்சிக்க வேண்டும். அதன்மூலம் வேலையில்லாப் பிரச்சினைகளையும், மக்கள் மத்தியில் நிலவும் வறுமையையும் ஓரளவேனும் நிவர்த்திக்க முடியும்.எனவே இதுவிடயத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதீத அக்கறை எடுக்கவேண்டும்.

இதன் மூலம் கொழும்பு பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதி பிரிவினரும் இயங்கி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (தி)

## வைத்தியர் வெட்டிக் கொலை

## வாதுவையில் சம்பவம்

(கொழும்பு)

நோயாளர்கள் போல் வந்த இருவர் வைத்தியரை கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

இச் சம்பவம் வாதுவப் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இதுபற்றித் தெரியவருவதாவது, கொலையுண்ட வைத்தியர் தனது வீட்டில் தனியார் வைத்தியசாலை அமைத்து தொழில் புரிந்து வந்தார்.

கடந்த சில நாட்களாக மேற்படி வைத்தியரை ஆயுதக்குழுவொன்று மிரட்டி வந்ததாகவும் ஆனாலும் கொலையுண்ட வைத்தியர் அவர்களின் மிரட்டல்களுக் குப் பயப்படாது தனது கடமை களைப் புரிந்து வந்தார் எனவும் பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளன.

(தி-61)

## வேலணை தேநீர்ச்சாலைகளுக்கு சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத்து

(ஊர்காவற்றுறை)

வேலணை வங்களாவடிச் சந்தியில்உள்ள இரு தேநீர்ச்சாலைகளுக்கு இறுதி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேநீர்ச்சாலைகளை சுகாதார முறைப்படி பராமரிக்குமாறு பல தடவை அறிவுறுத்தியும் அதற்கு கட்டுப்படாமையால், வேலணை பொதுச் சுகாதாரப் பரிசோதக ரால் சம்பந்தப்பட்ட இரு தேநீர்க் கடைகளுக்கும் இறுதி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலில் ஒருவார காலத்துக்குள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஆலோசனைப்படி தேநீர்ச்சாலைகள் பராமரிக்கப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (தி-75)

## திைசரி தியானம்

### சமாதி

சமாதி என்பது இறைவனோடு ஐக்கியமாதல் ஆகும். இது நிரந்தரப் பேரானந்தமும் நிரந்தரமான ஞானமும் கூடிய நிலையாகும். இது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. சவிகல்ப சமாதியில் அறிபவன், அறிவு, அறியப்படுவது என்கின்ற திரிபுடி அல்லது மூன்று வஸ் துக்கள் உண்டு. சமாதியில் மனம், புத்தி இந்திரி யங்கள் வேலை செய்வது கிடையாது. எல்லாவிதமான துவைதங்களும் முற்றிலும் மறைந்து விடுகின்றன. இடைவிடாது தியானம் செய்து நிர்விகல்ப சமாதியின் பேரானந்தத்தை அனுபவிக்கலாம்.

சுவாமி சிவானந்தர்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் சகல கூட்டங்களையும் நிகழ்வுகளையும் பகிஷ்கரிக்க பிரதேச செயலாளர்களும் உதவிப் பிரதேச செயலாளர்களும் தீர்மானித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜயபாலவும், அவரது ஆதரவாளர்களும், புளொட் சிங்களப் பிரதேசச் செயலாளரைத் தாக்கிய சம்பவத்தையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாகசேவை சங்கத்தின் தலைவர் எஸ். ரணுக்கே இது குறித்து கருத் துத் தெரிவிக்கையில், இச் சம்ப வம் குறித்து அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை நிர்வாக அதிகாரிகளை அதிருப்திக்கு உள்ளாக்கி உளளது.

சகல மாவட்டப் பிரதேச செயலகங்களிலும் இச் சம்பவம் தொடர்பான ஆட்சேப ஆர்ப்பாட்டம் ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி நடாத்தப்படவுள்ளது.

அத்துடன்,மேல் நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக இம்மாதம் 31ஆம் திகதி இலங்கை நிர்வாகசேவை மீண்டும் கூடவுள்ளது.

(தி-61)

## விபத்தை ஏற்படுத்தும் வகையில் கழிவுப் பொருட்கள் குவிப்பு

(மருதங்கேணி)

ஆனையிறவுப் புகையிரத நிலைய வீதியில் கிளிநொச்சி நகரக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால், அதற்கு அண்மையாகவுள்ள ஏ-9 பிரதான வீதியூடாகப் பயணம் செய்வதில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

கிளிநொச்சி நகரப் பகுதிக் கழிவுகள் யாவும் இப் பகுதியில் தொடர்ந்தும் கொட்டப்பட்டுவருவதால் அங்கு பெரும் துர்நாற்றம் வீசுவதுடன், பெரும் சுகாதாரச் சீர்கேடுகளும் நிலவி வருகின் றன.

இதனால், ஏ-9 பிரதான வீதியூடாக வாகனங்களில் பயணம் செய்வோர் இத் துர்நாற்றத்தைப் பொறுககமுடியாமல் அவதிப்படுவதுடன், இவ்விடத்தை மிக விரைவில் கடப்பதற்காக சாரதிகள் வாகனங்களை மிக வேகமாகச் செலுத்தி வருகின்றனர்.

இதனால், ஏ-9 பிரதான வீதியில் பெரும் விபத்துக்கள் ஏற் படும் அபாயம் உள்ளதுடன், கடந்த காலங்களில் விபத்துச் சம்பவங்கள் பலவும் இடம்பெற் றமை குறிப்பிடத்தக்கது.(தி-35)

## தேசிய எழுச்சிப் பேரவை யாழ்.அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்டச் செயலகம் கடந்த வெள்ளிக்கிழமை கோண்டாவில் இருபாலை வீதியில், தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சையினால் திறந்து வைக்கப்பட்டது.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்டச் செயலாளர் சொலமன். சூ.சிறில் தலைமை யில் இடம்பெற்ற இவ் வைபவத் தில் பொதுச் சுடரை வீரவேங்கை சேரனின் தந்தையார் தர்மலிங் கம், வண.பிதா எம்.எச்.கருணா ரத்தினம் அடிகளார், மௌலவி இப்ராகிம், அரசறிவியல் கல லூரியின் விரிவுரையாளர் அரசண்ணா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ விளையாட்டுக்கழகப் பொறுப்புாளர் கி.பாப்பா ஏற்றி வைத்தார். பேரவையின் பெயர்ப் பலகையை வண.பிதா எம்.எச். கருணாரத்தினம் அடிகளும், செயலகத்தினை பொறுப்பாளர் சஞ்சயும் திறந்து வைத்தனர்.

இவ் வைபவத்தில் மதகுரு மார், திணைக்களத் தலைவர் கள், கூட்டுறவுத் தலைவர்கள், தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள் யாழ்.மாவட்ட அரசியல் துறையின் துணைப் பொறுப்பாளர் செம்மணன, கொள்கை பரப்புச் செயலாளர் மா.க.ஈழவேந் தன் உட்பட பலர் கலந்து கொணடிருந்தனர். (த.16)

# சமாதான செயலகங்களுக்கிடையிலான நேரடித் தொடர்புகள் அறுந்துவிட்டன

## கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர்களிடம் புலித்தேவன் தெரிவிப்பு

(வவுனியா)

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழுகின்ற அனைத்து மக்களும் உரிமையோடும் கௌரவத்துடனும் வாழவேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடாகும். அதில் எந்த விதமான வேறுபட்ட கருத்துக்களுக்கும் இடமில்லையென விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ்.புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

கிழக்கிலங்கையில் இருந்து சென்ற முஸ்லிம் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கிழக்கிலங்கை ஊடகவியலாளர்களுடைய இந்த விஜயமானது ஒரு உறவுப்பாலமாக அமையுமெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு கடந்த சனிக்கிழமை பகல் நடை பெற்றது.

இன நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 40 ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை மாலை தங்களுடைய விஜயத்தை முடித்துக் கொண்டனர். ஊடகவியலாளர்கள் தங்களுடைய விஜயத்தின் இறுதியில் கிளிநொச்சியில் உள்ள சமாதானச் செயலகத்திற்கு விஜயம் செய்திருந்தனர். செய்தியாளர்களுடனான சந்திப்பில் புலித்தேவன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எப்போதும் நல்லுறவைக் கட்டி எழுப்பும் நோக்குடனேயே எங்களுடைய செயற்பாடுகள் அமைந்துள்ளன. இனங்களுக்கிடையில் சமத்துவம் பாதுகாக்கப்படுமானால் வடக்குக் கிழக்கில் அனைவரும் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழ முடியும்.

இலங்கை அரசின் சமாதானச் செயலகத்திற்கும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திற்குமிடையிலான நேரடித் தொடர்புகள் அற்றுப்போய்விட்டன. சமாதானத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பதனால் சர்வதேச சமூகமே கவலை கொண்டுள்ளது.

எமது சமாதானச் செயலகம் என்பது வெளிநாட்டு அமைச்சுப் போன்று செயற்படுகின்றது. வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருகைதரும் போது இங்குதான் அவர்களை எங்களுடைய முக்கியஸ்தர்கள் சந்திக்கின்றார்கள் சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டே எங்களுடைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.

அரசாங்கம் பாதுகாப்பிற்காக பெருமளவு நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளதால் வடக்குக் கிழக்கு மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். சமாதானத்தை முன்னெடுக்க வேண்டிய தென்னிலங்கை அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பாதுகாப்பிற்காக பெருமளவு நிதியை முதலீடு செய்து அதற்கு ஆதரவாக வாக்களித்து சமாதானத்தை முன்னெடுப்பதனைவிட இராணுவத்தை வலுப்படுத்தி போரை மீண்டும் கொண்டு வரவே முற்படுகின்றார்கள். இது அதிர்ச்சி அளிக்கக் கூடிய விடயமாகும்.

ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பதவிகளை தனது கையில் எடுத்துக் கொண்டமையால் சமாதானத்திற்கு பெரியதொரு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பது சர்வதேச சமூகத்தினதுடையதும் இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களுடைய கருத்தாகவும் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (த)

## இலங்கை அணி வெற்றி

இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான டெஸ் கிறிக்கட் போட்டியில் இலங்கை அணி ஒரு இனிங்ஸினாலும் 215 ஓட்டங்களினாலும் அபார வெற்றியீட்டியது.

நேற்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் சிறப்பாட்டககாரர் திலான் சமரவீர தெரிவானார். போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரருக்கான விருதை இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பெற்றுக்கொண்டார். (ச)

## கூட்டு....

ஆதரவை ஐக்கிய தேசிய முன்னணி தொடர்ந்தும் வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை தற்போதைய நெருக்கடி நிலை தோன்றக் காரணமான ஜனாதிபதியே பிரதமருடன் ஒத்துழைக்க வேண்டுமென கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார். (த-6)

## விடுதலைப் புலிகள்...

மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலும், முஸ்லிம் மக்களின் அதிக பட்ச ஆதரவைப் பெற்ற தரப்பு என்ற அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து செய்து கொண்ட உடன்படிக்கையில் தலைவர் பிரபாகரனும் நானும் ஒன்றாகக் கையெழுத்திட்டோம்.

2002ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12ம் திகதி செய்துகொண்ட இந்த உடன்படிக்கைகளில், உடன்படிக்கைக்கான தர்மம் இல்லை என்ற அடிப்படையில் இப்படியானதொரு முடிபை விடுதலைப் புலிகள் சார்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் சொல்லியிருப்பதாக பத்திரிகை அறிக்கைகள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகள் இந்த உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாக முறித்துக் கொள்வதற்கு இரு தலைவர்கள் மட்டும் செய்து கொண்ட ஒப்பந்தம் அல்ல. இது இரண்டு சமூகங்களின் சார்பில் செய்து கொண்ட உடன்படிக்கையாகும். இந்நிலையில் உடன் படிக்கையை ஒரு தலைப்பட்சமாக முறித்துக் கொள்ளும் போது அதன் பிரதிபலிப்பு பாரதூரமாக அமைந்து விடும் நிலைமை உண்டு என்பதை குறிப்பிடவேண்டும்.

முஸ்லிம் காங்கிஸ் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ள விடயமானது, புலிகள் சார்ந்த விடயமல்ல. எங்கள் தரப்பில் உள்ள பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி அவர்கள் தங்கள் பொறுப்புக்களில் இருந்து தப்பிக் கொள்ள முடியாது. சர்வதேச சமூகத்திற்கு முன்னால் செய்துகொண்ட உடன்படிக்கை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.எந்த விதமான பொறுப்புணர்ச்சியும் இல்லாமல் விடுதலைப் புலிகளின் சார்பில் எதனையும் தமிழ்ச்செல்வன் கூறக் கூடாது.

முஸ்லிம்கள் தனிக்குழுவாகப் பேசவேண்டுமென்று முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் நிறைவேற்றப்பட வேண்டும்.

## வடக்குக் கிழக்கில்..

வகையில் இத்தகைய குழுக்களின் நடமாட்டம் பற்றித் தனக்குத் தெரியவில்லை என்று கூறினார்.

கடந்த காலத்தில் கிழக்கிலங்கையில் பாதுகாப்புச் சம்பந்தமான பிரச்சினைகள் நிலவின தற்போது புலிகளுடன் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாகத் தகவல் ஒன்றும் இல்லை. இங்கு நிலைமை முன்னேற்றமடைந்துள்ளது. இங்கு பல புதிய பொலிஸ் நிலையங்களும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமாதானப் பேச்சுக்களின் போது, முஸ்லிம்களின் மனக்குறைகள் கேட்டறியப்படவில்லை. முஸ்லிம் சமூகத்தின் சார்பில்பிரதிநிதிகளும் சமாதா

அனுமதிக்கவில்லை.

இத்தகைய ஆயுதக்குழுக்கள் அமைக்க உதவுமாறு கோரி குறிப்பிட்ட முஸ்லிம்கள் என்னை அணுகியிருந்தும் நான் அவர்களுக்கு உதவ மறுத்துவிட்டேன். பொறுமையுடன் இருக்கும்படி அவர்களுக்கு அறிவுரைகூறி அனுப்பிவைத்தேன். கிழக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டவுடன் இத்தகைய உதவி கோரி எந்தவொரு முஸ்லிம் இளைஞனும் என்னிடம் வரவில்லை. எனவே தற்போது இத்தகைய குழுக்கள் நிச்சயமாக இல்லை.

இக்குழுக்களுக்கு அராபிய நாடுகள் நிதி உதவி வழங்குகின்றன


பாராட்டி வாழ்த்துகிறோம்



சமூக சேவைகளில்
முன்னின்று உழைக்கும்

12ம் திகதி செய்துகொண்ட இந்த உடன்படிக்கைகளில், உடன்படிக் ஒப்பந்தம் அல்ல. இது இரண்டு சமூகங்களின் சார்பில் செய்து கொண்ட உடன்படிக்கையாகும். இந்


# பாராட்டி வாழ்த்துகிறோம்



சமூக சேவைகளில் முன்னின்று உழைக்கும் உயர்திரு.

## எ.வின்சன்

அவர்கள்

சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளதையிட்டு அவரை மனதார வாழ்த்துகின்றோம்.


(c.7056) சங்கானை வாழ் மக்கள்



## நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள்

(3ஆம் பதிப்பு)

இன்று முதல் பெறலாம்



ஆசிரியர்: D.Sam

வெளியீடு: DMI

குறிப்புக்கள்:

- இலங்கையிலேயே முதல்தடவையாக சீடி றம (CD-ROM) உடன் வெளிவரும் நூல்.
- DMI, பூபாலசிங்கம் புத்தகசாலை (யாழ், கொழும்பு), ஸ்ரீலங்கா புத்தகசாலை (யாழ,கொழும்பு), JEYA BOOK CENTRE (கொழும்பு) இல் பெற்றுக் கொள்ளலாம்.

[C/7054]


சுட்டிக்காட்டி அவர்கள் தங்கள் பொறுப்புக்களில் இருந்து தப்பிக் கொள்ள முடியாது. சர்வதேச சமூகத்திற்கு முன்னால் செய்துகொண்ட உடன்படிக்கை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எந்த விதமான பொறுப்புணர்ச்சியும் இல்லாமல் விடுதலைப் புலிகளின் சார்பில் எதனையும் தமிழ்ச்செல்வன் கூறக் கூடாது.

முஸ்லிம்கள் தனிக்குழுவாகப் பேசவேண்டுமென்று முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் நிறைவேற்றப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஸுக்குமிடையிலான எழுத்து மூல உடன்படிக்கை பற்றி எதனையும் தமிழ்ச்செல்வன் மறுதலித்துக் கூற முடியாது.

பிரபாகரனும் நானும் கையெழுத்திட்ட மூலப்பிரதி என்னிடம் உண்டு. அதனைநான் பத்திரிகையாளர் மாநாட்டில் காட்டுவதற்கு உத்தேசித்துள்ளேன். அத்துடன் தமிழ்ச்செல்வன் கூற்றுத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவுள்ளேன் என்றும் ரவூப் ஹக்கீம் அப்பேட்டியின் போது கூறிப்பிட்டுள்ளார். (ம)

## மட்டு...

டுப்பாட்டுப்பிரதேசத்திலா அல்லது இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலா அமைக்கப்பட்டு வருகின்றது என்பதை உறுதி செய்வதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்டப் பிரதிநிதிகள் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு இன்று செல்லவுள்ளனர். (ம)

## சிங்களப்..

இந்த அடிப்படையில் மேல் மாகாணத்தில் மேல்மாகாண மக்கள் முன்னணியும், மலையத்தில் மலையக மக்கள் முன்னணியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதித்துவம்படுத்துகின்றது என்றும் மனோ கணேசன் தெரிவித்தார். (ச)

வில்லை என்று கூறினார்.

கடந்த காலத்தில் கிழக்கிலங்கையில் பாதுகாப்புச் சம்பந்தமான பிரச்சினைகள் நிலவின தற்போது புலிகளுடன் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாகத் தகவல் ஒன்றும் இல்லை. இங்கு நிலைமை முன்னேற்றமடைந்துள்ளது. இங்கு பல புதிய பொலிஸ் நிலையங்களும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமாதானப் பேச்சுக்களின் போது, முஸ்லிம்களின் மனக்குறைகள் கேட்டறியப்படவில்லை. முஸ்லிம் சமூகத்தின் சார்பில்பிரதிநிதிகளும் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டுமென பிரபாகரன் ஏற்றுக் கொண்டிருப்பினும் முஸ்லிம் பிரதிநிதிகள் பேச்சுக்களில் ஈடுபட புலிகள்

அமைக்க உதவுமாறு கோரி குறிப்பிட்ட முஸ்லிம்கள் என்னை அணுகியிருந்தும் நான் அவர்களுக்கு உதவ மறுத்துவிட்டேன். பொறுமையுடன் இருக்கும்படி அவர்களுக்கு அறிவுரைகூறி அனுப்பிவைத்தேன். கிழக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டவுடன் இத்தகைய உதவி கோரி எந்தவொரு முஸ்லிம் இளைஞனும் என்னிடம் வரவில்லை. எனவே தற்போது இத்தகைய குழுக்கள் நிச்சயமாக இல்லை.

இக்குழுக்களுக்கு அராபிய நாடுகள் நிதி உதவி வழங்குகின்றன. அதை முஸ்லிம் சமூகம் தவறான வழியில் பயன்படுத்துகின்றது என்பதை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். இவ்வாறு ஹிஸ்புல்லா தெரிவித்தார். (த)


# JAFFNA TECHNICAL INSTITUTE
## JAFFNA SRILANKA

REGD NO:15251 T.P:222 3335

## தொழிற் பயிற்சிகள்

- **RADIO, T.V. AND VIDEO DECK REPAIRING**
  சகல இன றேடியோ, ரீ.வி, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் Computer Monitor, UPS ,Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
- **MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**
  சகல இன மோட்டார், (F)பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase,Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)
- **MOTOR CYCLE MECHANISAM**
  சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)
- **AIR CONDITIONING AND REFRIGERATION**
  சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)
- **CITY AND GUILDS OF LONDON EXAM**
  1.POWER 2.ELECTRONICS

## புதிய பயிற்சிகள் ஆரம்பம்

05-01-2004(கிழமை நாட்களில்)
03-01-2004(சனி,ஞாயிறு நாட்களில்)

### மேலதிக விபரங்களுக்கு நேரில்

இல.367, நாவலர்வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்

-DIRECTOR
NO-07,Palaly Road,
Jaffna.

(c/7055)



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.